


# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2053 கடக நல்லோரை ஆடித் திங்கள், 10ம் நாள் (26-07-2022) தேய்பிறை 13ம் பிறைநாள் வெளியீடு +94 21 221 2739


## நம்பியாரூரர் குருபூசை



ஆடித் திங்கள் 20ம் நாள், விளக்கு (சுவாதி நாண்மீன் (நட்சத்திரத்தில்) (5ஆகஸ்ட்) நம்பியாரூரர் குருபூசை தென்னாட்டில் கொண்டாடப் படும்.

# தமிழர் மரபுவழி தென்புலத்தார் வழிபாட்டில்

# ஆடி மறைமதி (அமாவாசை) இம்முறை ஆடி 12 (யூலை 28)

## தந்தையை இழந்தவர்கள் கண்டிப்பாகப் பிடிக்கவேண்டிய விரதம்



பாலாவித் தீர்த்தம் - திருக்கேதீச்சரம், இலங்கை

தமிழர் மரபிலே தொன்றுதொட்டு மூத்தோர் வழிபாடுகள் மற்றும் நீத்தார் வழிபாடுகள் இரண்டறக்கலந்தவை ஆகும். பொதுவாக எல்லா மறைமதி (அமாவாசை) தினங்களும் விரதத்திற்குரிய நாட்களாயினும் தை, ஆடி மற்றும் புரட்டாதி மறைமதி (அமாவாசை) தினங்கள் தென்புலத்தார் பிதிர் வழிபாட்டிற்கு மிகவும் உகந்தவை ஆகும்.

குறிப்பாக ஆடி மறைமதி அன்று தந்தை, கணவன் மற்றும் ஆண் பிள்ளைகளை இழந்தவர்கள் நோன்பிருந்து மனம், மொழி, மெய்களால், வினைகளை அறுத்து வீடுபேறு வழங்கும் ஒரேயொரு கடவுளாகிய சிவபெருமானை வழிபட்டு உங்கள் தந்தைக்கும், முன்னோருக்கும் மீண்டும் பிறப்பில்லாத பேரின்பப் பெருவாழ்வு கிடைக்கவேண்டுமென்று விண்ணப்பம் வைத்து நெய் விளக்கேற்றி வழிபடவேண்டும். ஏற்கனவே அவர்கள் பிறப்பினை எடுத்திருந்தால் இப்பூவுலகவாழ்வில் வாழ்வாங்கு வாழ்வதற்கு பொருளும், பிணிகள் அற்ற வாழ்வும் பின்னர் அருளும் வழங்கி பிறவிப்பிணியையும் நீக்கவேண்டும் என்று வேண்டிக்கொள்ளுங்கள்.

இத்தினத்திலே அதிகாலை எழுந்து புனித தீர்த்தங்களில் அல்லது கிணற்றடி நீரில் ஓம் நமசிவாய என்ற மந்திரத்தினைச் சொல்லி நீராடி, சிவனை வழிபட்டு, மூத்தோரின், தந்தையின் படம் வைத்து , நெய் விளக்கேற்றி அவர்களுக்கு எள்ளும் தண்ணியும் இறைத்து பிதிர் வழிபாடு ஆற்றி, பலவகையான மரக்கறிகளுடன் நிறைவான அறுசுவை உணவுகளை வீட்டில் தாயார் செய்து, சிவனுக்கும் அவர்களுக்கும் படையல் செய்து சிவபுராணம் பாடி, பிற உயிர்களுக்கும் உணவளித்து, அன்னதானம் இட்டு, நீங்களும் குடும்பமாக இருந்து உணவினை உட்கொண்டு நிறைவு செய்யலாம். நீத்தாருக்கு முத்தி வேண்டி அச்சோப் பதிகத்தினையும் ஓதுங்கள்.

**மணிவாசகரின் திருவாசகம் - அச்சோப் பதிகம்**

**முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்**
**பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்**
**சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட**
**அத்தன் எனக்கு அருளியவாறு யார்பெறுவார் அச்சோவே**

## எரிபொருள் இல்லாத சூழலிலும் மாங்கை மாநகர் அரசனைக் காண அணிதிரண்டனர் மக்கள்



பண்டு நால்வருக்கு அறம் உரைத்த பெருமான் எழுந்தருளியுள்ள, பாடல் கிடைக்கப் பெற்ற சைவத் திருத்தலமாகத் திகழும் திருக்கேதீச்சரம் ஈழத்து வரலாற்றில் இன்றியமையாத திருக்கோயிலாகும். கேது வழிபாடு இயற்றிய கோயிலாகவும், மண்டோதரி வழிபாடு இயற்றிய கோயிலாகவும் சிறப்புப் பெறும் இக்கோயில், நாகர்களின் வழிபாட்டுக் கோயிலாகவும் இருந்து வந்துள்ளது.

இலங்கையில் நிலவிவரும் பொருளாதார சிக்கல்களின் மத்தியிலும், எரிபொருள் எள்ளளவும் இல்லாத இந்த கடும் காலத்திலும், திருக்கேதீச்சரம் மேவிய கேதாரத்தாருக்கு, நற்செய்கை (சுபகிருது) ஆண்டு, ஆடவை நல்லோரை ஆனித் திங்கள் 22ம் நாள் (யூலை 6) அன்று திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் அண்ணளவாக ஒன்றரை இலட்சம் சிவனடியார்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதில் இந்தியாவில் இருந்து சிவனடியார்கள், ஓதுவாமூர்த்திகள், சிவாச்சாரியார்கள், ஆதீன குருமுதல்வர் மற்றும் தம்பிரான் சுவாமிகளும் கலந்துகொண்டு சிறப்பித்தித்தார்.



அடியார்களின் பாவ வினைகளை அறுக்கும் பாலாவியில் நீரினை எடுத்து, அதனைச் தாமே சுமந்து ஏத்தி, புகுவார் அவர் பின்னர் புகுந்து சென்று எம் பெருமானுக்கு தாங்களாகவே ஊற்றி வழிபட்டமை பார்ப்போரை மெய்சிலிர்க்கவைத்தது. இவ்வாறான வழிபாடுகள் ஈழத்தில் மீண்டும் மலர வேண்டும். இதன்வழி சிவ வழிபாடுகள் மீண்டும் புத்துயிர் பெறவேண்டும். இதனையே அப்பர் பெருமான் மிகவும் அழகாகப் பாடியுள்ளார்.

**மாதர்ப் பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடி**
**போதொடு நீர் சுமந்து ஏத்திப் புகுவார் அவர் பின் புகுவேன்**
**யாதும் சுவடு படாமல் ஐயாறு அடைகின்ற போது**
**காதல் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்**
**கண்டேன், அவர் திருப்பாதம் கண்டு அறியாதன கண்டேன்**



## மாந்தை மாநகர் மன்னனாய் படவேரிடை மடவாளொடு எழுந்தருளி திருவருள் பாலிக்கும் கேதீச்சரப் பெருமானுக்கு திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா இடம் பெற்றது

தமிழ்மறையாம் திருமுறைப்பாடல் பெற்ற சைவத் தலமாகத் திகழும் திருக்கேதீச்சரம் ஈழத்து வரலாற்றில் இன்றியமையாத கோயிலாகும். கேது வழிபாடு இயற்றிய கோயிலாகவும், மண்டோதரி வழிபாடு இயற்றிய கோயிலாகவும் சிறப்புப் பெறும் இக்கோயில், நாகர்களின் வழிபாட்டுக் கோயிலாகவும் இருந்து வந்துள்ளது. அந்நியர் ஆட்சிக் காலத்தில் முற்றிலுமாக அழித்து ஒழிக்கப்பட்ட கேதீச்சரம், நல்லைநகர் ஆறுமுக நாவலர் அவர்களின் சிந்தனையில் இருந்து மீளெழுந்தது. சைவத் தேன் பொந்தாம் கேதீச்சரத்தை மீட்க சைவர்கள் ஆற்றிய களப்பணியும், மெய்ப்பணியும் அளப்பரியது.

சரியாக 19 ஆண்டுகளிற்குப் பின்னர், திருக்கேதீச்சரப் பெருமானுக்கு, நற்செய்கை (சுபகிருது) ஆண்டு, ஆடவை நல்லோரை ஆனித்திங்கள் 22ம் நாள் (யூலை 6), வளர்பிறை எழுமைப் பிறை நாளும் (சப்தமி) உத்தர விண்மீனும் கூடிய தினத்தில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா இடம் பெற்றிருந்தது. சைவத்தின் ஒல்காப்புகழை வீசிக் கொண்டு தனிநாயகராக மாதோட்டத்தில் இன்று எம்பெருமான் காட்சி நல்குகின்றார். எம்பெருமானின் குடமுழுக்குப் பெருவிழா வைக் காண, இலங்கை மட்டுமல்லாது, உலகம் முழுவதிலும் இருந்து அடியார்கள் அணிதிரண்டு வருகை தந்தனர். தமிழ்நாட்டிலுள்ள திருவாரூர் கூனம்பட்டி கல்யாணபுரி ஆதீன முதல்வர் சீர்வளர்சீர் (ஸ்ரீலஸ்ரீ) இராஜ சரவண மாணிக்கவாசகர் சுவாமிகள், தருமபுர ஆதீன திருச்சி மௌனமட தம்பிரான் மீனாட்சி சுந்தரம் சுவாமிகள், யாழ்ப்பாணம் நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர் சீர்வளர்சீர் (ஸ்ரீலஸ்ரீ) சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் போன்றோரும் கலந்து ஆசி நல்கியிருந்தனர்.

இக்குடமுழுக்கை செவ்வென ஆற்றிட ஐம்பூதத் திருத்தலங்களிலிருந்து சிவாச்சாரியார்கள் வருகை தந்திருந்ததுடன், தங்கள் கோயில்களிலிருந்து ஆகுதி பொருட்கள் கொண்டு வந்து வேள்வியில் ஆற்றியிருந்தமை சிறப்பாகும்.

அடியவரின் ஆனந்த ஆர்ப்பரிப்புக்கு மத்தியில் எம்பெருமான் பெருஞ்சாந்தி விழாக் கண்டதோடு எம்பெருமாட்டியுடன் உறைந்து அருள் பாலிக்கின்றார். இக்குடமுழுக்கு வேளையில் சிவபூமி அமைப்பினால், திருக்கேதீச்சர கோயில் வளாகத்தில் சிவன் திருவுருவச் சிலையும், ஆறுமுக நாவலர் திருவுருவச் சிலையும் திறந்து வைக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

**“புத்தராய் சில புனைதுகில் உடையவர்**
**புறனுரைச் சமண் ஆதர்**
**எத்தர் ஆகிநின்று உண்பவர் இயம்பிய**
**ஏழைமை கேளேன்மின்**
**மத்தயானை மறுகிட உரிசெய்து**
**போர்த்தவர் மாதோட்டத்து**
**அத்தர் மன்னுபா லாவியின் கரையிற்கே**
**தீச்சரம் அடை மின்னே”** - காழியர் கோன்.

**திருச்சிற்றம்பலம்**

# நயினைப்பூ நாகம்மன் தாளை அடைந்தது

ஈழத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க சைவக்கோயில்களில் ஒன்றாகத் திகழும் பெருமைக்கு உரியது நயினை நாகபூடணி அம்மன் திருக்கோயில். இலங்கையின் வடபால் யாழ்ப்பாணத்திலே, நயினைத்தீவிலே எழுந்தருளி அருள் பாலிப்பவள் நாகம்மை. அத்துணை சிறப்பு வாய்ந்த அம்மையின்



திருக்கோயிலில் அறங்காவலராக இருந்து கோயிலை நிர்வகித்து வந்த சிவத்திரு கா.ஆ. தியாகராசா அவர்கள் நற்செய்கை ஆண்டு ஆனித்திங்கள் வளர்பிறை எட்டாம் பிறை நாளில் (07.07.2022 வியாழக்கிழமை) இறைபதம் அடைந்தார்.

திருமுருகமாமணி, திருவாசக செம்மல், திருப்பணிச்செம்மல், சைவப்புலவர், சிவநெறிச் செம்மல், தேசமாண்ய தேசகீர்த்தி போன்ற பலவிருதுகளுக்குச் சொந்தக்காரரான இவரின் ஒப்பற்ற ஆளுமையின் கீழ் நயினை எம் பிராட்டியின் திருக்கோயில் பெருவளர்ச்சி கண்டது.


சைவத்தின் வளர்ச்சிக்காக பல இன்றியமையாத பணிகளை தன் வாழ்வில் திறம்பட செய்த பெருமகான் இவர். நயினாதீவு நாகபூடணி அம்மன் கோயில் அறங்காவலராக 45 வருடங்களுக்கு மேலாக பணியாற்றிய பெருமைக்கு உரியவர். 1988 முதல் அறங்காவலர் சபையின் பெரும் பதவிகளை வகிக்கப்பெற்ற தலைவராக இருந்த புகழ் இவருக்கே உரியது.

1970 காலப்பகுதியில் புத்தளத்திலே இந்து மகா சபையை நிறுவி, சைவர்களின் கல்விக்காய் புத்தளம் இந்து மகா வித்தியாலத்தை அடித்தளம் இட்டு உருவாக்கிய சிறப்புக்கு உரியவர். இவர் வவுனியா நீர்ப்பாசன திணைக்களத்தில் பணியாற்றிய வேளையில், வவுனியா கந்தசுவாமி கோயில் திருப்பணிச்சபையில் தலைமையாக இருந்து கோயிலினை பூரணப் படுத்தி திருக்குடமுழுக்கு செய்து வைத்தார். இதனால் ”திருமுருகமாமணி” என்னும் கௌரவ பட்டத்தை கிருபானந்தவாரியார் அவர்களால் வழங்கப் பெற்று பாராட்டுப் பெற்றார்.

திருமுறைகள், கந்தபுராணம், வாதவூரடிகள் புராணம் போன்றவற்றில் ஆழ்ந்த புலமையும் மிகுந்த ஈடுபாடும் கொண்டவர். அம்பாளின் ஆலயத்தில் திருமுறை பாடுவதும், புராண வாசிப்பு செய்வதும், அபிராமி அந்தாதி முதலிய நூல்களைப் பாடுவதும் என்ற விதமாக தன் வாழ்க்கையையும் ஏனையோர் வாழ்க்கையையும் நல்வினைப்படுத்திய மாமனிதர் எல்லாம் வல்ல நாகபூடணி அம்மையின் பாதக்கமலங்களை அடைந்தார். அன்னவரின் இறுதிச் சடங்குகள் இடம்பெற்று அவரின் பூதவுடல் பூதங்களோடு சங்கமித்ததோடு, அவரின் ஆன்மா எம்பெருமான் எம் பெருமாட்டியின் பாதங்களையும் அடைந்து உய்ந்து கொண்டது.

**திருச்சிற்றம்பலம்**


## நயினை நாகபூடணி அம்மன் கோயில் வருடாந்த பெருந்திருவிழா செம்மையாக இடம்பெற்றது



சிவபூமியாம் இலங்கையில் நாகர்கள் செறிந்து வாழ்ந்த வடபகுதியான யாழ்ப்பாணத்திலே நயினைத் தீவிலே வீற்றிருந்து அருள்பாலிக்கின்றாள் நயினை நாகம்மை. கறை மிடற்று அண்ணலின் கண்டம் பிடித்த கருணை நாயகியாய் வீற்றிருந்து அருள் சுரக்கும், நாகம்மையின் வருடாந்த பெருந்திருவிழாவானது கடந்த ஆனித் திங்கள் 15ம் நாள் (29.06.2022) கொடியேற்றத்துடன் தொடங்கி, ஆனித்திங்கள் 28ம் நாள் (12.07.2022) தேர்த்திருவிழாவும் அடுத்தநாள் தீர்த்தத் திருவிழாவும் என பதினாறு நாட்கள் திருவிழா சிறப்பாக இடம்பெற்று முடிந்தது. எம்பெருமாட்டியின் திருவிழா வெகு செம்மையான இடம்பெற்றதுடன் எண்ணற்ற அடியவர்கள் கலந்து எம்பெருமாட்டியின் திருவருளில் மூழ்கிப் பேரானந்தம் அடைந்தனர்.

**திருச்சிற்றம்பலம்**

## தமிழிசை ஆய்வாளர், சுவாமி விபுலானந்தர் நினைவுதினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது



உலகின் முதலாவது தமிழ்ப் பேராசிரியரும், இலங்கையின் முதலாவது தமிழ்பேராசிரியரும் ஆன விபுலானந்த அடிகளாரின் நினைவு தினம், ஆடித் திங்கள் 3ம் நாள் கொண்டாடப் பட்டது. நீடி யாழ் பாடகருக்கு வாள் அருள் செய்த ஈசனின் இசைக்கருவியாகப் போற்றப்படும் யாழினை ஆய்வு செய்து, அவ் ஆய்வில் திருமுறைகளையும் சேர்த்து “யாழ் நூல்“ என்ற ஒப்பற்ற நூலை உலகுக்கு தந்தார். அது போல் பல அற்புத நூல்களின் ஆசிரியராகத் திகழும் இவர் ஈழத்தமிழுக்கு கிடைத்த பெரும் வரமாகும். 1935 ஆம் ஆண்டு திருவண்ணாமலையில் இடம்பெற்ற சைவ மாநாட்டின் போது சுவாமி விபுலானந்தர் அவர்கள் ஆற்றிய பேருரையில் இருந்து ஒரு சிறு பகுதியை இன்றைய ஒவ்வொரு சைவர்களும் நினைவிலிருத்த வேண்டிய தேவை உள்ளது. அப்பகுதி கீழே வழங்கப் பட்டுள்ளது.

**“ஆக்கமனைத்திலும் மிக்கதொன்றாகிய பேரின்ப வீட்டினையடைவிப்பது இறைவனது பெருங்கருணைத் திறமே என்பது முடிந்த முடிபாகின்றது. அப்பேரருட்டிறத்தின் பெற்றியினை உணருகின்ற உணர்வே எல்லா ஞானத்திலும் சிறந்த ஞானமாகும். இஃது எய்திய வழி, அனைத்து நலனும் எய்துவாதலின், இதனை முரசறைந்து உலகனைத் திற்கும் உரைப்பது சைவர் மேற் பொறுத்த கடனாகும். இத்திருத்தொண்டினைச் செய்வதற்கு யாம் ஒரு சிறிதேனும் பின்னிற்க வேண்டியதில்லை. சைவராகிய யாம் ஒருங்கு கூடும் இடத்திலெல்லாம் நமது தலைவனது பேரருட்டிறத்தின் பெற்றியினைக் கூசாது மொழிவோமாக. யாம் அவ் அருண்நெறி நின்று நீடு வாழ்வோமாக. அது எம்மை உய்விப்பதாக.”**

இத்தகைய ஆற்றலாளர்களை போற்றி திருவருள் பெறுவோம்.

**“உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது”**

**திருச்சிற்றம்பலம்**



தென்னாடு
செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,
ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
0715588737, aathan@thennadu.org



# வழக்காறுகள் வாழ நல்லூரான் பெருந்திருவிழா காண்கின்றான்!

எதிர்வரும் ஆவணித் திங்கள் இரண்டாம் நாள் (ஆகஸ்ட் 18), யாழ்ப்பாணத்து நல்லை நகர் கந்தனுக்கு கொடியேற்றத்துடன் இவ்வாண்டுக்கான பெருந்திருவிழா ஆரம்பமாகின்றது. உலகமெங்கும் உள்ள முருக அடியார்கள், நல்லுரை நாடி அணி அணியாக வரப்போகின்றார்கள். தமிழரின் பாண்பாட்டுத் தலைநகரான யாழ்ப்பாணம். பத்தியின் தலைநகரமுமாகத் திகழப் போகிறது. பெரியோரும் இளையோரும் ஆழ்ந்த அன்பினால் தொண்டு செய்ய நல்லைக் கந்தன், எம்மைக் காக்கும் தலைவன், அலங்காரக்கந்தனாக நல்லையம்பதி வீதி தோறும் எழுந்தருளி இறையின்பம் நல்கப் போகிறான்.

இலங்கைத் திருநாடு முழுவதும் பலநூறு ஆலயங்கள் கோபுர கலசங்களோடு உயர்ந்து நின்றாலும், மரபைப் பேணும் முறமையாலும், நேரம் தவறாத பெருமையாலும், நல்லூர் என்றும் தனித்த சிறப்பிடம் பெறுகிறது எனலாம். யாழ்ப்பாணத்தின் பண்டைய மரபுகளையும், வழக்காறுகளையும், திருவிழாக்களின் வழியாகவே பேணி, அவற்றை அடுத்த தலைமுறைக்கு அடையாளப்படுத்துகின்ற பெரும் பணியையும் நல்லூர் ஆலயத்தின் நிர்வாகிகள் செய்துவருவது போற்றுதற்குரியதாகும்.

யாழ்ப்பாண செங்குந்த மரபினர் தம் முன்னோர் சிதம்பரத்துக்கு கொடிச்சீலை கொடுத்ததைப்போலவே, இன்றும் நல்லூருக்கு தலைமுறை தலைமுறையாக கொடிச்சீலை கொடுத்து வருகின்றனர். அந்நிகழ்வு பழமை மாறாமல் இன்றும் மாட்டுவண்டிகள் முன்வர நிகழ்வதைப் பார்க்கின்றோம். 1591 ஆம் வருடம் ஒக்ரோபர் மாதம் 26ஆம் நாள், கொழும்புத்துறையில் இறங்கிய போர்த்துக்கேயப்படை நல்லுரை நோக்கி முன்னேறியபோது வீரமாகாளியம்மன் ஆலயத்தை அரனாக கொண்டு மன்னனின் படைகள் எதிர்த்துப் போராடிய போது, யாழ்ப்பாணத்து மக்களும் தம் உயிரை வெறுத்து போர்க்கோலம் பூண்டு போராடியதாக வரலாறு சொல்கிறது. அப்போரில் நல்லூர் ஆலய பூசகரும் இறந்தார். எம் மூதாதையர்கள் உயிரைக் கொடுத்தேனும் காக்க நினைத்த ஆலயம், இன்றும் அந் நிகழ்வை நினைவுபடுத்தும் வண்ணம், யாழ்ப்பாணத்து அரச வீரர்களைப் போல உடையணிந்த காவலர்களை நல்லூர் ஆலயப் பெருந்திருவிழாக்களின் போது நாம் காணலாம்.

பாடசாலைப் பிள்ளைகள் எல்லோரும் ஆகம சீலர்களாய், அணிவகுத்து கையில் மேல்தாங்கி, சேவற்கொடி ஏந்தி, தீவெட்டி பிடித்து ஆலய வீதியை வலம்வருவது, இன்னும் பல நூறு ஆண்டுகள் ஆனாலும், யார் வந்து வழிபாட்டை அழிக்க முற்பட்டாலும் முருக நெறி, இந்த மண்ணில் பிறக்கும் ஒவ்வொரு பிள்ளையினதும் மூச்சோடு கலந்தே இருக்கும் என்பதை எம் கண்ணெதிரே காட்டுகின்றது. வறுமைப்பட்ட மக்கள் வாழ, சிறு வியபாரிகள் தம் பிழைப்பை முன்னகர்த்தவும், நல்லூரின் பெருந்திருவிழா பாதை அமைத்துக் கொடுக்கின்றது. இருபத்தைந்து நாட்கள் திருவிழாக்காலமும், அடியார்க்கு அமுது செய்ய, ஆலயச் சூழலிலே மடங்கள் தம்மை தயார்படுத்திக் கொள்ளும்.

புரதான வரலாற்றைக் கொண்ட நல்லூர் ஆலயம், அதன் பரிபாலனம் என்பவற்றால் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய செய்திகள் அதிகம் உண்டு. துயர் வந்த போதும், இடம் தெரியாமல் அழிந்த போதும், கந்தன் காப்பான் என்ற நம்பிக்கையே, இன்று நல்லூர் ஆலயமாக, விண்ணையளக்கும் கோபுரங்களோடு நிமிர்ந்து நிற்கின்றது.

**“இலகிய சகாத்த மெண்ணூற்றெழுபத்து நான்கி**
**னலர்திரி சங்கபோதியாம் புவனேகவாகு**
**நலமுறும் யாழ்ப்பாணத்து நகரிகட்டுவித்து**
**குலவியகந்தனார்க்கு கோயிலொன்றமைப்பித்தானே”**

என்று பழம் பாடல் குறிக்கும் நல்லூர் ஆலயம், போர்த்துக்கீசராலும் ஒல்லாந்தராலும் சூறையாடப்பட்டும், இடிந்தழிக்கப்பட்டும் சிதலமடைந்த போது, ஆலயத்தை மீண்டும் அமைக்கப் பெரும்பணியாற்றி இன்றும் பண்டைய வழமைகள் மாறாமல் பரிபாலனம் செய்து வரும் “மாப்பாண முதலியார்” பரம்பரையினர் என்றென்றும் போற்றுதற்குரியவர் ஆகின்றனர்.

எனவே ஆரம்பமாகப்போகும் நல்லூர் கந்தன் ஆலயப் பெருந்திருவிழாக் காலத்தில் ஒழுக்க நெறியாளர்களாக கலந்து ஆறுமுகச் சிவனின் இன்னுருளைப் பெற்று உய்வோமாக!

**“கண்டவர் கண்குளிர இருகைகள் தலைக்கேற**
**விண்டுளம் நின்றுருக மண்ணோர் விண்ணவர்கள் போற்ற**
**பண்டகு நல் மொழியாள் இருப்பாக மகிழ்ந்துறையும்**
**தண்டலை சூழ் நல்லைவாழ் சிவசண்முகனே சரணம்”** – பரமானந்தப்புலவர்

திருச்சிற்றம்பலம்



தென்னாடு
செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு.யாழவன் சிவவேதன்,
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (70) 770 1111, sivavethan@thennadu.org



# சைவப்பட்டாம் பூச்சிகளே அமிழ்தை உண்ணச் சேருங்கள்

படவேரிடை மடவாளொடு உடனாகிய ஒருவனாக எம்பெருமான் கேதீச்சரக் கோயிலிலே எழுந்தருளி அருள் பாலித்துக் கொண்டு இருக்கின்றார். எம்பெருமான் திருஞானசம்பந்தராலும், தம்பிரான் தோழர் சுந்தரமூர்த்தி நாயனாராலும் போற்றிப் பாடப்பட்ட கேதீச்சரத்தண்ணல், அடியவர் புடை சூழ திருக்குடமுழுக்கு கண்டு வீற்றிருக்கின்றார். இந்த வேளையிலே, ஈழம் இன்னொரு முக்கிய நிகழ்வை நோக்கி நகர்ந்து கொண்டு இருக்கின்றது.

தமிழ்நாட்டில் சைவத் தலைமையகமாக தில்லை கூத்தப்பிரானின் பெருங்கோயில் இருப்பது போல, ஈழத்தின் சைவத் தலைமையகமாக இருப்பது எம்பெருமான் நல்லைகந்தனின் திருக்கோயிலே. அத்துணை சிறப்பும் ஒல்காப்புகழும் வாய்ந்த நல்லைப்பதியுறையும் எம்பெருமான் வெகு விரைவில் திருவிழாக் காண உள்ளான். கிட்டத் தட்ட இரண்டு வருடங்களுக்குப் பிறகு அடியவர்கள் மனநிறைவோடு எம்பெருமானைக் கண்டுகளிக்க திருவருள் கைக்கூடியுள்ளது.

நல்லைக் கந்தனின் திருவிழா என்றாலே அது யாழ்ப்பாணத்தின் பெருவிழா. யாழ்ப்பாணத்தை ஆளும் அரசனல்லவா எம்பெருமான். அவனின் திருவிழாக் காலத்திலே, ஒட்டுமொத்த தேவருலகும் யாழ்ப்பாணத்துக்கு இறங்கி விடும். சிறியவர், பெரியவர் என எந்த வேறுபாடும் இன்றி மக்கள் கூட்டம் அண்ணலின் அருட்கடலில் ஆழ்ந்து மகிழும். எம்பெருமான் அசைந்து வரும் பேரழகைக் கண்டுகளிக்க இந்திரனின் கண்களைக் கடன் வாங்கினாலும் போதாது. அவனின் அழகை வருணிக்க அருணகிரிநாதர் தான் மீண்டும் பிறந்து வர வேண்டும். வேல் வடிவிலும், ஆறுமுக வடிவிலும், வள்ளி தெய்வானை உடனாக எம்பெருமான் எழுந்து அருளும் அழகே பேரழகு.

தமிழ்நாட்டிலே பெரும்பான்மை நாயன்மார்களுடைய வாழ்வியல் தில்லைக்கூத்தப்பிரானொடு கலந்திருக்கும். அது போல, ஈழத்தின் ஆறுமுகநாவலர், யோகர் சுவாமிகள் உட்பட்ட பெரும்பாலான அருளாளர்களின் வாழ்க்கை நல்லை இல்லாமல் இல்லை. சிவயோகர் சுவாமிகள் தன்னுடைய கிழமை வணக்கப்பதிகத்திலே “பதமலர் போற்றும் அடியவர் தம்மைப் பரிவுடனே காக்குங் குருமணியே” என்று நல்லை நகர் வாழும் எம் பெருமானைப் போற்றுகின்றார்.

**“தயாநிதி யேயென்று தாள்போற்றும் அன்பர் தமக்கு வரும்**
**வியாதி வறுமை விலக்கு மருந்தே விழுப்பொருளே**
**தியான நிலையி லுனைக் கண்டு தேறித் தெளிவதற்கு**
**வியாழக்கிழமை வருவாய் நல்லூரில்வாழ் வேலவனே”**

என்பதும் அந்தப் பதிகத்தின் ஒரு பாடலே. எம்பெருமானை வழிபட்டால் வியாதியும் வறுமையும் தொலைந்து போகும் என்று சிவயோக சுவாமிகளே சொல்லி விட்டார். இந்த இரண்டாலும் தானே கடந்த காலத்திலும், தற்போதும் சிக்கலை எதிர் நோக்குகின்றோம். ஆகையினால் எம்பெருமானை உள்ளார்ந்த அன்போடு வழிபட்டு, தயாநிதியே என்று அவனின் தாள்களைப் பற்றிக்கொண்டால் எந்தப் பிரச்சனை வந்தாலும் பாதியிலே பறந்தோடும். அதற்கு சிவயோகரே சாட்சி.

மண்ணிலே பிறந்த எமக்கு இரண்டு பயன்கள் உள்ளதாக திருஞானசம்பந்தர் சொல்வதாக சேக்கிழார் பட்டியலிடுகின்றார். முதலாவது மதி சூடுகின்ற அண்ணலின் அடியார்களுக்கு அமுது செய்வித்து, அவர்களின் பசியைப் போக்கி மகிழ்தல், இரண்டாவது எம்பெருமானின் திருவிழாப் பொலிவைக் கண்டு இன்பமெய்தி மகிழ்தல். அப்படிப் பட்ட ஒரு வாய்ப்புத் தான், எமக்குக் கிடைத்திருக்கின்றது.

ஆதலாலே சைவர் எல்லீரும் வந்து திரளுவீர் நல்லையிலே. தேவர்கள் அமுது வெம்பினாலும் அவர்களுக்கும் கிடைக்காத பெருவாய்ப்பு எமக்கு கிடைத்திருக்கின்றது. எம் கண்களூடாக எம்பெருமானைக் கண்டு இன்புறும் அரிய வரமல்லவா இது. இதனை வீணாக்கும் சைவர், வரம் வாங்கி அதைத் தொலைத்த சூரபதுமனுக்கு ஒப்பானவர்களே. இயலுமானவர் வாரீர், கடினமானவர் நினைந்தே தொழுமின், கவிஞரானவர் புகழ்ந்து போற்றுமின், காதல் கொண்டவர் கரைந்து கசிமின்.

வீட்டிலே ஒரு விழா என்றால் அதற்குச் செல்லாமல் இருப்போமா நாம். அன்போடு அன்பாக வைத்துப் போற்றும் எம்பெருமானின் விழாவல்லவா இது. எம் வீட்டு விழாவாய் எல்லோரும் மகிழ்ந்து போற்ற வேண்டிய அற்புதத் திருவிழா. குழந்தைகள், பெரியவர், முதியவர் என எந்த வேறுபாடும் இன்றி விழாக் காணும் எம்பெருமானைக் கொண்டாட வேண்டியது எமது கடமை, அதுவே சைவக்கற்பின் அடித்தளம். திருக்கேதீச்சரம் தேன்பொந்து போல, நல்லை அமிழ்தக் கலசம். தேவ அசுரர்கள் பாற்கடலைக் கடைந்தெடுத்த அமிழ்தம், எமக்கு இயல்பாகவே கிடைக்கின்றது. சைவப்பட்டாம் பூச்சிகளே அமிழ்தை உண்ணச் சேருங்கள்.

**“நல்லூர் எனும் பதியை நாடித் தெரிசித்தாற்**
**பல்லூழி வாழலாம் பார்”**

என்பதும் யோகர் சுவாமிகளின் வாக்குத் தான். நல்லைக் கந்தன் அமிழ்தம் என்பதால் தானே, அவன் அருளைச் சுவைத்தவர்களைப் பல்லூழி வாழ வைக்கின்றான். இதை ஈழத்துப் பெருஞ்சித்தரே சொல்லி இருக்கின்றார். அமிழ்தை உண்ணும் இராகு, கேதுவாய் சிங்கள, இசுலாமியர்களும் வந்து கொண்டிருக்க நாம் மட்டும் உண்ணாமல் இருத்தல் தகுமோ. சேருவோம், சேர்ந்து போற்றுவோம், போற்றிப் பணிவோம், பணிந்து அருள் பெறுவோம். அருள் பெற்று மகிழ்வோம் நல்லைக் கந்தனிடம்.

**“அயனெனவாகி அரியெனவாகி அரனெனவாகி அவர்மேலாய்**
**இகரமும் ஆகி எவைகளும் ஆகி இனிமையும் ஆகி வருவோனே**
**இருநிலம் மீதில் எளியனும் வாழ எனது முன் ஓடி வர வேணும்”**

திருச்சிற்றம்பலம்

# பவளவிழாக் காணும் உமாமகேஸ்வரி அம்மையாரின் சைவத்தமிழ்ப் பணிகள்

அருவமும் உருவமும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்து ஆங்கு உதித்தனன் உலகம் உய்ய! - **கந்தபுராணம்**

**“பிறவா யாக்கைப் பெரியோன்”** என்று சிலம்பு உரைக்கும் ஈசனே, உலகம் உய்வதெற்கென ஆறுமுகச் செவ்வேள் முருகனாக உதித்தனனாம். இவ்வாறு சைவத்திற்கும் தமிழுக்கும், புறம்பான விசைகள் தோன்றி அதன் இருப்புக்கு இடையூறு செய்கின்ற போதெல்லாம், அருளாளர்கள் தோன்றி, சைவத்தமிழ் தளைக்க வழிவகுத்தனர்.

சைவத்தமிழ் வளர்ச்சியில் ஆண்களுக்கு நிகராக அரும்பெரும் பணியாற்றும் சைவ மங்கையர் பலரை இந்தப் புண்ணிய பூமி எமக்கு அளித்துள்ளது. சைவம் பெண்களுக்கு துறவை விதிக்கவில்லை. காரணம் அவள் பெண்ணாக இருப்பதே ஒரு துறவு நிலைக்கு நிகரானது என்று கண்டது எங்கள் செழுஞ்சைவம்! தனக்கென வாழாது, கணவனார் மறைய, திலகவதியார் மேற்கொண்ட வாழ்க்கை நெறியை சேக்கிழார் பெருமான் **‘மனைத்தவம்’** என்று கூறிப் போகின்றார். அவ்வாறு திலகவாதியாரும், காரைக்கால் அம்மையாரும், மங்கயற்கரசியாரும் ஆற்றிய உறைப்புடைய சிவப்பணிகளை நினைவூட்டும் வகையில், கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக சைவப்பயிரை, தொண்டு நீர் ஊற்றி தளிர்க்கச்செய்து கொண்டிருப்பவரே, வைத்தியக் கலாநிதி சிவத்திருமதி. சத்தியானந்தம் உமாமகேஸ்வரி அம்மா அவர்கள்!

அம்மா அவர்கள், 1947ம் வருடம் யூலை மாதம் 26ம் நாள், சென்னையில் சிவத்திரு சி. சுந்தரவடிவேலு, சிவத்திருமதி சு. மரகதவல்லி தம்பதியினருக்கு தவப்புதல்வியாகப் பிறந்தார். சிவத்திரு ல. சத்தியானந்தம் என்பவரை கரம்பிடித்து, சிவத்திரு ச.வினுராஜ் (பொறியாளர்) புதல்வனையும் பெற்றெடுத்தார். 1971ம் ஆண்டு விஞ்ஞான இளமானிப் பட்டம் கால்நடை வைத்தியத்தில் பெற்று பின்னர் 1979 விஞ்ஞான முதுமானிப் பட்டமும் பெற்றார். பின்னர் உதவி உதவி இயக்குனராக தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறையில் பணிபுரிந்து இளைப்பாறினார்.

அத்துடன் திருவாவடுதுறை ஆதினம் நேர்முக தேவாரப்பயிற்சி மையம் - சென்னை அமைப்பாளர், சைவ சித்தாந்த பயிற்சி மையம் - சென்னை அமைப்பாளர், சிவாலய அடியார்கள் குழுமம் - கும்பகோணம், ஆலோசனைக்குழு உறுப்பினர் - அருளாளர் அருணகிரிநாதர் மணிமண்டப அறக்கட்டளை, திருவண்ணாமலை, அரனருள் புரவலர், ஆயுட்கால உறுப்பினர் - (இன்ரெக், தஞ்சாவூர்) போன்ற கௌரவப் பதவிகளை வகிக்கின்றார்.

உமாமகேஸ்வரி அம்மா அவர்கள், 1955 இல் ரிஷிகேஷ் சுவாமி சிவானந்தர் அவர்களிடம் தீட்சை பெற்றார். அத்துடன் ஆன்மீக பயிற்சிகளாக1977 - 1983 காலப்பகுதியில் சுவாமி சின்மயானந்தா அமைப்பில் வேதாந்தம் பயின்றது, 1984ல் பூஜ்யஸ்ரீ சுவாமி தாயனந்த சரஸ்வதி அவர்களிடம், ரிஷிகேஷ் ஆனைகட்டி ஆசிரமத்தில் உபநிடதங்கள் பயின்றது, 2006ல் சைவசித்தாந்தத்தின் நான்கு தொகுப்புகள் பயின்றது என்பவற்றை குறிப்பிடலாம்.





## அம்மா அவர்களின் ஆன்மிகப் பணிகள்

2008 தொடக்கம் 2010 வரையான காலப்பகுதியில் சென்னையில் பன்னிரண்டுத் திருக்கோயில்களில் திருவாசகம் முற்றோதல் நடத்தியதுடன், 2010 இல் மதுரையில் செந்தமிழரசு சிவத்திரு.கி.சிவகுமார் (முதுநிலை பொறியாளர்) அவர்களின் தலைமையில் திருஞானசம்பந்தர் பெருமானுக்கு பதிகப் பெருவிழா எடுத்து திருப்புகலூர், திருவீழிமிழலை பதிகங்களின் விளக்க உரையுடன் கூடிய குறுந்தகடும் வெளியிட்டிருந்தார். மேலும் 2011 இல் திருவண்ணாமலை சேஷாத்ரி ஆசிரமத்தில் **‘திருவண்ணாமலையில் திருவாசகம்’** என்ற தலைப்பில் இரண்டு நாள் கருத்தரங்கு நடத்தி, **‘அருட்பத்து’** என்ற குறுந்தகடும் வெளியிடப்பட்டது. 2012 இல்திருவெண்ணெய் நல்லூர்த் திருக்கோயில் வளாகத்தில் உள்ள, வழக்கு வென்ற அம்பல மண்டபத்தில் செந்தமிழரசு சிவத்திரு. கி.சிவகுமார் அவர்களின் தலைமையில் சுந்தரமூர்த்தி நாயனார் பதிகப் பெருவிழா எடுத்து, சுந்தரரின் வரலாறு குறும்பட குறுந்தகடும் வெளியிட்டிருந்தார். அத்தோடு 2013 இல் திருவதிகையில் திருநாவுக்கரசு நாயனார் விழா எடுத்து அப்பர் பெருமானின் வரலாறு குறுந்தகடும் வெளியிடப்பட்டிருந்தமை போன்று, நால்வர் பெருமக்கள் உணர்த்திய நால்வகை நெறிகளையும் மக்கள் வாழ்வியலோடு ஒன்றிக்கச் செய்வதற்கு அரும்பணியாற்றியுள்ளார்.



திருவாடுதுறை ஆதினத்தில் 24வது குருமகாசன்னிதானம் அவர்களின் அருளாணையின் வண்ணம் திருமூலர் ஐப்பசி அசுவதி குரு பூசை விழா ஆதீன மடவளாகத்தில் உள்ள முருக நாயனார் அரங்கத்தில் (இவ்வரங்கம் பல வருடங்களுக்குப் பின் திறக்கப்பட்டது) நடத்தினார்.

அத்துடன் 24வது குருமகாசன்னிதானத்தின் அருளாணையின் வண்ணம் 2014ல் **“விதியை வெல்வது எப்படி”** என்ற நூலினை இசைக் குறுந்தகடாக வெளியிட்டது, திருவாவடுதுறையில் திருமூலர் விழா நடத்தியது, மேலும் 2015, 2016 திருவாவடுதுறையில் திருமூலர் விழா எடுத்த போது அனைத்து ஆதினப் பள்ளிக் கூடங்களிலும் திருமந்திரப் போட்டியை நடத்தி, குழந்தைகளுக்கு பரிசு அளித்தமை, 2016 இல் திருவண்ணாமலை சேஷாத்திரி சுவாமிகள் ஆசிரமத்தின் நிர்வாகக்குழு உறுப்பினராக இருந்து, அங்கு பல ஆன்மிக நிகழ்சிகள் நடத்தியமை, சிதம்பரத்தில் 2016 ஆம் ஆண்டு முதல் ஆடல்வல்லான் அருளிசை மன்றத்தில் உறுப்பினராக இருந்து ஆற்றிய சேவைகள்,

2017இல் திருவாவடுதுறை ஆதினம் சைவ திருமுறை நேர்முகப் பயிற்சி மையம், கும்பகோணம் அமைப்பாளராக இருந்து பணியாற்றியது, மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாற்று படத்தொகுப்பாக வெளியிட்டு, உ.வே.ச. நூலகத்திற்கு தெய்வசேக்கிழார் மன்றம் மூலமாக அளித்திருந்தது என்று தொடர்கின்றது அம்மாவின் சைவத் தொண்டுகள்.

2015, 2016, 2017 ஆகிய மூன்று ஆண்டுகளில் இந்து ஆன்மீக கண்காட்சியை சென்னையில் திருவாடுதுறை ஆதீனம், தருமை ஆதீனம், திருப்பனந்தாள் மடம் சார்ந்த விற்பனை அரங்குகளை பொறுப்பேற்று நடத்தியதுடன், மேலும் 2018 வைத்தீசுவரன் கோயிலில் சூரன்போர் நிகழ்வில், தருமை ஆதின இளைய சன்னிதானத்தின் திருக்கரங்களால் அருணகிரி நாதரின் திருப்புகழ் கொலு வகுப்பு - இசை குறுந்தகடும் வெளியிட்டது.

2018 இல் சென்னை கமல விநாயகர் சத்சங்கம் (ஐ.சி.எப்) மகளிர்தின விழா, திருமூலர் திருவிழாவாக, சிவத்திரு. சத்குரு ஓதுவார் அவர்களின் திருமந்திரம் இசை நிகழ்ச்சி, யோகாசனம் நிகழ்ச்சி நடத்தியிருந்தார். அத்தோடு 2019 இல் திருவண்ணாமலையில் அருணகிரிநாதர் மணிமண்டபம் அமைப்பில் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அதனூடு பல சேவைகளை ஆற்றினார். 2018, 2019ம் ஆண்டிற்கான திருவாடுதுறை ஆதின நேர்முகப் பயிற்சி மைய அமைப்பாளராக, சென்னை கீழ்க்கட்டளையில் பணியாற்றியதுடன் சிவாலய அடியார்கள் அமைப்பின் பேரில் புதிதாகபதினொரு குறுந்தகடுகள் ஏற்படுத்தி வெளியிட்டுள்ளார்.

இளைய சமுதாயத்தினருக்கு சிவத்தினை குறிப்பாக நாயன்மார்களின் அற்புதங்களைப் பரப்ப வேண்டும் என்ற அம்மாவின் சிந்தனையில் உதித்த வெளிப்பாடே “திருஞான சம்பந்தரின் வாழ்வில் அற்புதங்கள்” என்ற நூல். 2020 ஆம் ஆண்டு தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குரு மகா சன்னிதானம் அவர்களின் திருக்கரங்களினால் திருவையாற்றில், அப்பர் கைலாய காட்சி அன்று வெளியிடப்பட்டது. அம்மா அவர்கள் 2021 ஆவணித் திங்கள் சைவ நெறி முகாம் ஒன்றினை திருவண்ணாமலை சேஷாத்திரி ஆசிரமத்தில் நடத்தினார்கள். அத்துடன் 2021ம் ஆண்டு மார்கழித் திங்கள் திருப்பாவை திருவெம்பாவை விழாவினை திருவண்ணாமலை சேஷாத்திரி ஆசிரமத்தில் நடத்தி அத்துடன் அவரின் மலர் ஒன்றினையும் வெளியிட்டார்.

## அம்மா அவர்களின் சிவாலயத் திருப்பணிகள்

தமிழகத்தில் 267 பாடல்பெற்ற சிவத் திருத்தலங்கள் உள்ளன. அத்திருத்தலங்களில் சிவப்பணி தொடரும் நோக்கில் சிவாலய அடியார் அமைப்பை 10.09.2018 அன்று தொடங்கி, தமிழகத்திலுள்ள 100க்கும் மேற்பட்ட கோயில்களில் சிவபெருமானுக்கு அனுதினமும் ஒரு வேளையாவது பூக்கள் சமர்ப்பிக்க, மாதம் ரூபாய் 500 அத்திருத்தலத்து குருக்கள் பெற்றுக்கொள்ள ஏற்படுகள் செய்யப்பட்டிருந்தன. இந்த திட்டத்தில் ஒவ்வொரு திருத்தலத்திற்கும் 3 அல்லது 4 குடும்பங்கள் அறிமுகப்படுத்தப்படுத்தியிருந்தனர். மேலும் அந்த திருத்தலத்திற்குச் சென்று சிவனை தரிசித்து வாழ்க்கையில் எல்லா நலன்களையும் பெற விரும்பும் அடியார்கள் இந்த அமைப்பில் இணைவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தது.

**(05ஆம் பக்கம் பார்க்க)**

# பவளவிழாக் காணும் உமாமகேஸ்வரி அம்மையாரின் சைவத்தமிழ்ப் பணிகள்

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அமைப்பில் திருத்தல சிவபெருமான், திருத்தலத்து குருக்கள், அறிமுகப்படுத்தப்பட்ட அடியார்கள் மட்டுமே உள்ளனர். அறிமுகப்படுத்தப்பட்ட அடியார்களுக்கு அத்திருத்தலத்தின் வரலாறு மற்றும் புகைப்படங்கள், குருக்களுடைய வங்கி கணக்கு எண், குருக்கள் தல வரலாறு சொல்லும் காணொளிகள் பதிவு என்பனவற்றயும் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

விதிமுறையாக வருடம் ஒரு முறையேனும் தங்களுக்கு



அறிமுகப்படுத்தப்பட்ட திருத்தலத்திற்கு தங்களுடைய சந்ததிகளை அழைத்துச் செல்ல வேண்டும், சந்ததிகளுக்கு பதிகங்களின் பலனை தெரிவிக்க வேண்டும், திருத்தலத்து வரலாற்றினை தெரிவிக்க வேண்டும், திருத்தலத்தின் படங்களை வீட்டில் பூசை அறையில் வைக்க வேண்டும் என்று, பாடல் பெற்ற தலங்களின் பெருமைகளை அடுத்த சந்ததியினர் அறியவேண்டும் என்று அயராது உழைத்து வருகிறார்.

உண்ணாமுலை அண்ணாமலை உழவார பணிக்குழுவானது 2019 இல் ஆரம்பிக்கப்பட்டு திருச்சோற்றுதுறை, திருப்பாலைத்துறை, திருகொள்ளம்புதூர் என்ற மூன்று திருத்தலங்களில் உழவாரப்பணி சிறப்பாக நடைபெற்றிருந்தது. சிவத்திருமதி. மல்லிகா, சிவத்திரு. இராஜேஷ் போன்றவர்களும் பெரும்பங்கு அளித்துள்ளார்கள். அமைப்பின் சிறப்பு பணிகளாக திருப்புறம்பயம் திருத்தலத்தில் பலவருடங்களாக நடைபெறாமல் இருந்த கார்த்திகை சோமவார சங்குத் திருமஞ்சனம், திருமதி. உமாமுகுந்தன் (சென்னை) முயற்சியால் மறுபடியும் 2019இல் ஆரம்பிக்கப்பட்டது. மேலும் பலவருடங்களாக நவராத்திரி கொலு இல்லாமல் இருந்தது. சிவத்திரு உமாமுகுந்தன், வைத்தியக் கலாநிதி சிவத்திருமதி ச. உமாமகேஸ்வரி முயற்சியால் அதே ஆண்டில் கொலு ஆரம்பிக்கப்பட்டது.

அடுத்ததாக திருப்பெரும்புலியூர், அவளிவநல்லூர் திருத்தலங்களில் கழுவாய் வழிபாட்டு (பிரதோஷ) பூசை, சிறப்பாக நடைபெற சிவத்திரு. இராமலிங்கம் (கும்பகோணம்), சிவத்திரு. சிவகுமார் (கோவை) தொண்டு செய்துள்ளார்கள். திருப்பாலத்துறை திருத்தலத்தில் பள்ளியறை பூசை நடக்காமல் பள்ளியறை வௌவால்கள் அறையாக இருந்தது. பின்னர் பள்ளியறை புதிதாக நிர்மானிக்கப்பட்டது. இந்த சிறப்புமிக்க சிவத்தொண்டினை செய்தவர்கள், சிவனடியார்களான சிவத்திரு. சீனிவாசன் (பாபநாசம்), சிவத்திரு. சுவாமிநாதன் (பாபநாசம்), வைத்தியக் கலாநிதி சிவத்திருமதி ச. உமாமகேஸ்வரி (கும்பகோணம்), சிவத்திருமதி. சித்ரா கணேஷ்வர் (பல்லடம்), சிவத்திரு. நாகராஜன் (கும்பகோணம்), சிவத்திரு. மணிகண்டன் (கும்பகோணம்), சென்னை



திருவாடுதுறை ஆதின பயிற்சி மையம் கீழ்கட்டளை மாணவர்கள் போன்றோர்களும் ஆவர்.

## அம்மா அவர்களின் வாழ்வியல் சிறப்புகள்

**பெற்ற விருதுகள்:** பெண்ணின் நல்லாள் - திருச்சி தெய்வச் சேக்கிழார் தெய்வத் தமிழ் மன்றம், சித்தாந்த ஜோதி - கோவை பேரூர் ஆதீனம், காரைக்கால் அம்மையார் - சென்னை கமல விநாயகர் சத்சங்கம் (ஐ.சி.எப்), திருமுறைத் திருதொண்டு பரவுவார் - சென்னை அருள்மிகு



இராஜராஜேசுவரி வழிபாட்டு மன்றம், என்பனவாகும்.

**எழுதிய கட்டுரைகள்:** சிவபரத்துவம், நியதி தத்துவம், சத்தியம் சொன்னோம் சதாநந்தி ஆணையே, தவம் வேண்டும் ஞானம் தலைபட வேண்டில் என்ற நான்குமாகும்.

**வெளியிட்ட நூல்கள்:** திருத்தொண்டர் வரலாற்று சிற்பங்கள், தாராசுரம் ஐராவதீச்சுரம் திருக்கோயில், திருஞானசம்பந்தர் வாழ்வில் அற்புதங்கள், காவிரி தென்கரை வடக்கரை பாடல் பெற்ற சிவத்திருத்தலங்கள், காவிரி தென்கரை வடகரை திருத்தலங்கள், சப்த மங்கை திருத்தலங்கள், சித்தத்தை சிவன்பாலே வைத்த அடியார்களின் வரலாறு, பொன் உலவாக்கிழி பதிகம், கங்கை கரையினிலே சிவப்பரத்துவம், திருமூலரின் 30 உபதேச விளக்கவுரை என்பனவாகும்.

**மேற்கொண்ட விழாக்கள்:** மதுரை திருஞானசம்பந்த பெருமானுக்கு பதிகப் பெருவிழா, திருவண்ணாமலை மாணிக்க வாசகப் பெருமானுக்கு விழா, திருவெண்ணைநல்லூர் சுந்தர மூர்த்தி நாயனார் பதிகப் பெருவிழா, திருவதிகை திருநாவுக்கரசு நாயனார் பதிக பெருவிழா, திருவாடுதுறை ஆதீனத்தில் 2013ல் இருந்து 2017 வரை குரு மகா சன்னிதானம் அருள் ஆசியில் திருமந்திரம் போட்டி திருமூலர் விழா நடத்தப்பட்டதுபோன்றவாகும்.

இவ்வாறு சிவத்தின் மாண்பை தமிழுலகெங்கும் நல்ல அமுதாய் வழங்க, இளம் சைவப்பயிர்களை தொண்டேனும் நீர் ஊற்றி, சீரிய அறுவடைக்கு அரும்பாடுபட்டு தயார்ப் படுத்திவரும், வைத்தியக் கலாநிதி சிவத்திருமதி. சத்தியானந்தம் உமாமகேஸ்வரி அம்மா அவர்கள் பவள விழாக் காண இருக்கின்றார். எனவே அம்மாவினுடைய அரும்பெரும் பணிகள் நூற்றாண்டாய் தொடர வாழ்த்தி, தென்னாடு ஐம்பூதநாதரை வேண்டி நிற்போம்!

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

**"வண்டமிழ்ச் சிவப்பணி செய்யும் செல்வியே**
**கண்டினு மினிய சைவத்தமிழ் வளர்ப்பீர்!"**

**தொடர்புகளுக்கு : வைத்தியக் கலாநிதி சிவத்திருமதி. சத்தியானந்தம் உமாமகேஸ்வரி,**
**திருவாவடுதுறை ஆதின திருமுறை நேர்முகப் பயிற்சி மையம், சைவ சித்தாந்த மையம், அமைப்பாளர், கீழ்கட்டளை, சென்னை.**
**தொடர்பு எண் :** +919677263122

**தொகுப்பு - தென்னாடு நிலவன் மற்றும் பவிஸ்கா**





# அருள்மிகு திருகேதீச்சரநாதர் திருக்குட நன்னீராட்டு முன்னைய நாள் நிகழ்வுகள்



# அருள்மிகு திருகேதீச்சரநாதர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டு நிழல்கள்



# ஈழத்து சித்தர்கள்: தவத்திரு சித்தானைக்குட்டி சுவாமிகள்

(சித்தானைக்குட்டிச் சுவாமிகள் சென்ற திங்கள் தொடர்ச்சி)

## மட்டக்களப்பு பனங்காட்டில் சித்தானைக் குட்டிச் சுவாமிகள்

சித்தானைக் குட்டிச் சுவாமிகள் கிழக்கு மாகாணத்திலுள்ள எல்லாத் தமிழ்க் கிராமங்களுக்கும் காலால் நடந்து சென்று அக்கிராமங்களைப் புனிதப்படுத்தியுள்ளார். பனங்காடு என்பது அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஒரு கிராமம். அங்கு பெரியதம்பி என்றொரு புண்ணியசீலர் வாழ்ந்து வந்தார். சுவாமிகள் பனங்காட்டிற்கு வருவதாகக் கேள்வியுற்றார். சுவாமிகளுக்கும் அவரோடு உடன் வருபவர்களுக்கும் பெரிய விருந்து ஒன்று தயாரித்தார். அவர் எதிர்பார்த்தபடி சுவாமிகள் அன்று வரவில்லை. அவரும் அவரது மனைவியாரும் அன்று முழுவதும் சுவாமிகளை எதிர்பார்த்து உண்ணாமலே இருந்து விட்டார்கள். உணவுப் பொருட்களை அப்படியே எடுத்து வைத்து மூடிவிட்டுச் சுவாமி வந்தபின்புதான் தாம் உண்பதாக பிரதிக்கினை எடுத்துக் கொண்டார்கள். மூன்று நாட்களின் பின்புதான் சுவாமிகள் வந்தார்கள். வீட்டிலுள்ளவர்கள் மூன்று நாட்களாக உண்ணவே இல்லை.

சுவாமிகள் வரும்போதே சாப்பாட்டைக் கெதியில் எடுங்கள். நல்லாகப் பசிக்கிறது என்று கூறினார்கள். சாப்பாட்டைத் திறந்து பார்த்தபோது அப்பொழுது ஆக்கிய உணவுபோல ஆவி பறந்தது. எல்லாரும் மகிழ்வுடன் உண்டு மகிழ்ந்தனர்.

பெரியதம்பிக்கு நீண்ட நாட்களாக குழந்தை இல்லை. பலருடைய முன்னிலையில் தமக்குப் புத்திரப் பாக்கியம் கிட்ட வேண்டுமென்று சுவாமிகளிடம் வேண்டுதல் செய்தார். “என்னைப்போல உனக்கொருவன் வருவான்” என்று சுவாமிகள் கூறினார்கள். சுவாமிகளுடைய வாக்குப் பலித்தது. ஒரே ஒரு மகன் பிறந்தார். அவரின் பெயர் இராமநாதன் என்பதாகும்.

பனங்காட்டிலுள்ள முருகன் மார்க்கண்டு என்பவருக்குத் திடீரெனப் பைத்தியம் பிடித்துவிட்டது. சுவாமிகளுடைய பத்தர்களில் சிலர் அவரைச் சுவாமிகளிடம் கொண்டு சென்றனர். சுவாமிகள் ஒரு தேநீர் கோப்பையில் சாராயத்தை ஊற்றிக் கொடுத்தார். மார்க்கண்டு அதை வாங்கிக் குடித்தார். குடித்து முடிந்ததும் திமிர் கோப்பையையும் சப்பிச் சாப்பிடத் தொடங்கினார். அத்துடன் பைத்தியமும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது.

பனங்காட்டில் ஆறுமுகம் குடும்பத்தினர் சுவாமிகள் மீது மிகுந்த பற்றுடையவர்கள். ஒருமுறை ஆறுமுகத்திற்குக் கடுமையான காய்ச்சல். காய்ச்சலின் வேகத்தில் மணித்தியாலக் கணக்கில் அறிவிழந்திருந்தார். உடனே சுவாமிகளிடம் காரைதீவிற்குக் கொண்டு சென்றார்கள். அங்கு சுவாமிகள் இல்லை. களுவாஞ்சிக்குடியில் இருக்கிறார் என்று சொன்னார்கள். சுவாமியைத் தேடி அங்கு சென்று இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்தார்கள். சுவாமிகள் ஆறுமுகத்தைத் தன்மடிமீது படுக்க வைத்தார். டாக்டர் வரவழைக்கப்பட்டார். டாக்டர் பரிசோதித்துப் பார்த்துவிட்டு தகுந்த நடவடிக்கை எடுக்காவிட்டால் உடனே இறந்துவிடுவார் என்றார். ஆறுமுகம் கண்விழித்துச் சுவாமிகளுடைய முகத்தைப் பார்த்தார். சுவாமிகள் வேண்டாம் என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தார். சுவாமிகள் மீது கொண்ட நம்பிக்கையினால் மருந்தை நாடவில்லை. சுவாமிகள் சிறிது நேரம் மௌனமாய் இருந்தார். நோய் தீர்ந்து சுவாமிகளுடைய மடியினின்று எழுந்து சுவாமிகளை வணங்கினார். ஆறுமுகம் கூட இருந்தவர்கள் எல்லாரும் பெரிய ஆச்சரியத் திற்குள்ளானார்கள். சுவாமிகளோ ஒன்றும் நடவாதது போல் மிகமிகச் சாதாரணமாகக் காணப்பட்டார்.

ஒருமுறை ஆறுமுகத்தினுடைய மனைவியாருக்குக் கடுமையான சுகவீனம் ஏற்பட்டது. ஆறுமுகம் மனைவியாரைக் கூட்டிக் கொண்டு சுவாமிகளிடம் காரைதீவுக்குச் சென்றார். இவர்கள் செல்லும்போது நன்றாக இருட்டிவிட்டது. அங்கு பல அடியார்கள் தங்கி இருந்தனர். சுவாமிகள் இப்பொழுதுதான் சாப்பிட்டுவிட்டுப் படுத்துவிட்டார் என்றார்கள். இவர்கள் இருவரும் தாம் கொண்டுசென்ற பிரசாதத்தைச் சுவாமிகள் முன்வைத்துச் சூடம் கொளுத்திக் கும்பிட்டார்கள். சுவாமிகள் புன்முறுவலோடு எழுந்து படைக்கப்பட்ட பிரசாதம் முழுவதையும் உண்டு விட்டு அந்த அம்மையாருக்கு விபூதி கொடுத்தார். அத்துடன் அம்மையாரின் நோய் நீங்கியது.

பனங்காட்டில் சிவன் கோயில் ஒன்று உள்ளது. கோயில் கட்டப்படுவதற்கு முன்பு மக்கள் அந்த இடத்திற்குப் பகலில்தானும் போக அஞ்சுவார்கள். காரணம் அந்த இடத்தில் பேய்கள் நடமாடுவதாக வதந்தி பரவியிருந்தன. சுவாமிகள் அங்கு வரும் காலங்களில் இரவிலே உலாவித்திரிவார்கள். ஒரு நாள் சுவாமிகள் அந்த ஊரவர்களை அழைத்து, காலால் நிலம் அளந்து இந்த இடத்தில் சிவன் கோயில் கட்டுங்கள் என்று அடையாளம் வைத்துக் கொடுத்தார். பிராமணர்களும் ஊர்ப் பிரமுகர்களும் விசேட சோதிடர்களை வரவழைத்து நிலையம் இட்டுத் தருமாறு கேட்டார்கள். வந்த சோதிடர்களும் அதே இடத்தையே கோயில் கட்டுவதற்கு நிலையமாகத் தெரிவு செய்தார்கள். அதே இடத்தில்தான் கோயிலும் கட்டப்பட்டுள்ளது.

பனங்காட்டு விதானையார் கணபதிப்பிள்ளை சதாசிவத்திற்கு மிகக் கடுமையான நோய். யாழ்ப்பாண வைத்தியர்களும் இயலாதெனக் கைவிட்டு விட்டார்கள். ஆறுமுகத்தை விபூதி போடுமாறு வற்புறுத்தினார்கள். சித்தானைக்குட்டி சுவாமிகள் கொடுத்த விபூதியை ஆறுமுகம் அவரை நினைத்துக் கொண்டே போட்டார். நோய் உடனே மாறியது.

பனங்காட்டில் உள்ள செம்பன் பாக்கியம் என்பவர் ஒரு சலவைத் தொழிலாளி. தகராறு காரணமாக அவருக்கு யாரோ சூனியம் செய்து விட்டார்கள். பல வைத்தியர்களும் மந்திரவாதிகளும் முயன்றும் இயலாது கைவிட்டுவிட்டார்கள். சுவாமி கொடுத்த விபூதியை ஆறுமுகம் வெகுபத்தி



சிரத்தையோடு சுவாமிகளின் நாமத்தை ஓதிக்கொண்டே அணிந்தார்கள். அத்துடன் நோய் இருந்த இடம் தெரியாமலே போய்விட்டது.

நடராஜா என்பவருக்கு ஒரு குழந்தை. அதன் பெயர் சரஸ்வதி என்பது. குழந்தைக்கு நோய் கண்டதும் மட்டக்களப்பு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். 21 நாட்களாகியும் குழந்தையின் நோய் குறையவில்லை. குழந்தை இனி ஒரு நாளைக்குமேல் உயிர் வாழாது என்று வைத்தியர்கள் முடிவு கட்டினர். அதனால் குழந்தையைப் பெற்றோரிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்று கருதினர். குழந்தையை உடனே கொண்டு செல்லுமாறு வைத்தியர்கள் பெற்றோருக்குத் தந்தி அடித்தார்கள். நடராஜா குழந்தையை நேராக ஆறுமுகம் வீட்டிற்கே கொண்டு சென்றனர். குருநாதன் கொடுத்த விபூதியை ஆறுமுகம் குருநாதனின் நாமத்தை உச்சரித்துக் கொண்டே குழந்தையின் வாயில் இட்டார். வேறு எந்த மருந்துகளும் இல்லாமலே குழந்தையின் நோய் குணமாகிவிட்டது.

## கோளாவிலில் சித்தானைக் குட்டிச் சுவாமிகள்

கோளாவில் குழந்தைவேல் என்பவர், சுவாமிகளுடன் மிக ஈடுபாடுள்ளவர். ஒருநாள் இருவரும் தெருவிலே சென்று கொண்டிருந்தார்கள். எதிரே ஒருவன் கூடையில் மீன்கொண்டு வந்தான். அதில் ஒரு கோர்வையைச் சுவாமிகள் எடுத்தார்கள். மீன் கொண்டு வந்தவன் நிமிர்ந்து பார்த்து விட்டுத் தன் வழியே சென்றுவிட்டான். பக்கத்திலுள்ள கோயிலில் கொண்டு சென்று மீனைப் பக்குவப்படுத்தி அடுப்பில் வைத்து நெருப்பை மூட்டினார்கள். சுவாமி கோயிலில் மீன் ஆக்குகிறார் என்ற செய்தி கோயில் முகாமையாளருடைய காதுக்கு எப்படியோ எட்டியது. ஓடோடியும் வந்தார். சட்டியைத் திறந்து பார்த்தார். சட்டியில் பலாச்சுளைகள் இருப்பதைக் கண்டு சுவாமிகளிடம் மன்னிப்புக் கோரிச் சென்றுவிட்டார்.

குழந்தைவேல் என்பவர் சிதம்பர யாத்திரை சென்று திரும்பினார். ஊர் திரும்பும்போது ஊர்க்கோடியிலே சுவாமிகளைத் தரிசித்தார். எதிரிலே ஒருவர் இளநீர் கொண்டு வந்தார். அதனை வாங்கிக் கத்தியால் வெட்டி இதனைக் குடியுங்கள் என்று அவரிடம் சுவாமிகள் கொடுத்தார்கள். அவர் பயபத்தியுடன் வாங்கிக் குடித்தார். குடித்து முடிந்ததும் சுவாமிகள், சிதம்பரம் தீர்த்தம் எப்படியிருக்கிறது? என்று கேட்டார். அவர் சிதம்பரத்தில் குடித்த தீர்த்தமே, அந்த இளநீருள் இருந்ததை நினைந்து ஆச்சரியப்பட்டார்.” சிதம்பரத்தில் குழந்தைவேல் கண்டகாட்சிகளை எல்லாம் ஒன்றும் விடாமல் சுவாமிகள் விவரித்துரைத்தார்கள். குழந்தைவேல் ஆச்சரியத்துடன் கேட்டார்.

சுவாமிகளுடைய உண்மை நிலையை உணர்ந்தவர் எவருமில்லை என்றே கூறலாம். அவர் தமது கோலங்களையும் செயல்களையும் அடிக்கடி மாற்றி உலாவுவார். மௌனமாய் இருப்பார். சில சமயம் யோக நித்திரையிலும் ஆழ்ந்திருப்பார். இருந்தாற் போல் சுடலையில் தனிமையில் உலாவுவார். யோகநித்திரையில் இருக்கும் காலங்களில் வேறோர் ஊரில் சுவாமிகள் உலாவியதாகச் செய்திகள் வரும். இதனைச் சாதாரண மக்களால் புரிந்துகொள்ள முடிவதில்லை. சுவாமிகள் முன்னிலையில் எவரும் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசமுடியாது. அங்ஙனம் பொய் பேசுபவர்கள் எவராயினும்சரி பகிரங்கமாக உடனே தண்டனைக்குள்ளாவர்.

கோளாவிலைச் சேர்ந்த வெள்ளையன் வைத்தியர் 1944 ஆம் ஆண்டு ஆவணித் திங்களன்று குயீன்ஸ்பரி நவநாதசித்த சுவாமிகளின் சமாதியை வணங்கச் சென்றிருந்தார். சமாதியில் மூன்று நாட்கள் தங்கியிருந்தார். ஒரு விளக்கு வாங்கி வைப்பதாக நேர்த்திக்கடன் செய்தார். அர்ச்சனை செய்வித்து விபூதி சந்தனம் முதலிய பிரசாதங்களுடன் ஊர்திரும்பினார். கணவனும் மனைவியுமாகச் சுவாமிகளை வணங்க காரைதீவு சென்றனர். செல்லும்போது நவநாதசித்தரின் பிரசாதங்களும் கொண்டு சென்றனர். இவர்கள் சென்ற சமயம் 42 பேர் சுவாமிகளின் சந்நிதியில் இருந்தனர். இவர்களும் சென்று சுவாமிகளுக்கு வணக்கம் செலுத்திவிட்டு ஓரிடத்தில் அமர்ந்தனர்.

சிறிது நேரம் கழிந்தது. “கொண்டு வந்த விபூதி சந்தனத் தைக் கொண்டுவாடா, கொண்டு வாடா” என்று சுவாமிகள் உரத்தகுரலில் கூறினார்கள். எல்லோரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தனர். சுவாமிகள் எழுந்து சென்று வெள்ளையன் வைத்தியரின் மடியில் இருந்த விபூதி சந்தனத்தைத் தாமாகவே வலுவில் எடுத்து எல்லோருக்கும் பங்கிட்டார். வந்தவுடன் ஏன் கொடுக்கவில்லை என்று கடிந்து கொண்டார். “நான் படுத்த மாமரத்தில் ஒரு காணிக்கை கட்டியிருக்கிறாய். அது நல்ல காணிக்கை. அங்கே எப்போதாவது ஒரு விளக்குக் கொண்டு சென்று வை” என்று சுவாமிகள் கூறினார்கள்.

1948ம் ஆண்டில் சுவாமிகள் வெள்ளையன் வைத்தியர் வீட்டில் ஏழு நாட்கள் சவம்போலக் கிடந்தார்கள். ஆடவில்லை. அசையவில்லை. அவ்வேளையில் அப்புத்தளையைச் சேர்ந்த ரீமேக்கர் குழந்தை அப்பர் அவர்களும் வைத்தியர் வீட்டில் நின்றார். அப்பொழுது சுவாமிகள் இங்கு நிற்கிறார்கள் என்பதைக் கேள்வியுற்று ஐந்து சுவாமிகள் சுவாமியைப் பார்க்க வந்தார்கள். பனங்காடு, கோளாவில் ஆட்களும் சுவாமியைத் தரிசிக்க வரும்போது வெறுங்கையுடன் வருவதில்லை. கையுறை ஏதாவது கொண்டு வருவார்கள். மக்கள் சுவாமிக்கு 5 போத்தல் சாராயமும் 41 ரூபா பணமும் காணிக்கையாக வைத்தார்கள். ஐந்து சுவாமிகளுள் ஒருவர் சாராயத்தை நிறையக் குடித்ததோடு 41 ரூபாவையும் எடுத்துக் கொண்டு சென்றுவிட்டார். இதனைக் கண்ணுற்ற குழந்தை அப்பர், சுவாமிக்குக் கிடைக்கிற காணிக்கையைப் பாதுகாத்துக் கொடுக்க வேண்டிய பொறுப்பு உம்முடையதல்லவா என்று வைத்தியரைக் கண்டித்தார். அதற்கு வைத்தியர் “இது சுவாமிகளின் கட்டளை அல்ல” என்றார். எல்லாவற்றையும் சுவாமி அறிவார்தானே என்றார்.

காசை எடுத்துக் கொண்டு போன சாமியார் கஞ்சாவுடன் திரும்பினார். ஐந்து பேரும் சேர்ந்து கஞ்சா புகைத்துக் கொண்டிருந்தனர். ஆறாம்நாள் அனுமன் சுவாமி மாத்திரம் நிற்க மற்றவர்கள் எல்லாரும் போய்விட்டனர். ஏழாம்நாள் சாண்டோ சங்கரதாஸ் வந்தார். சுவாமிகளும் எழுந்து உட்கார்ந்தார்கள். குழந்தை அப்பரைப் பார்த்து இருக்கிற சாராயம் எல்லாவற்றையும் எடு என்றார்.

3 போத்தல் சாராயத்தையும் ஒரே முறையில் குடித்தார். வந்தவர்கள் எல்லோரும் சுவாமிகளை வணங்கி விபூதி பெற்று இருக்கும் சமயத்தில், பணத்தை எடுத்துச் சென்ற சாமியார் வந்தார். அவரைக் கண்டதும் சுவாமிகள் வாருங்கள் வாருங்கள் என்று கூறி வரவேற்றுத் தமக்குப் பக்கத்திலே இருத்தினார்கள்.

சிறிது நேரம் மௌனமாயிருந்தனர். திடீரெனச் சுவாமிகள் மௌனத்தைக் கலைத்தார். “இது உனக்குச் சௌக்கியமான வேலையா சுவாமி” என்று கேட்டார் சித்தானைக்குட்டி சுவாமிகள். நீ சாராயம் குடிக்கிறது, கஞ்சாக்குடிக்கிறது, பெண்சாதி பிள்ளைகளுக்கு யார் சாப்பாடு கொடுக்கிறது? அவர் கொண்டு வந்த பாத்திரத்தால் சித்தானைக்குட்டி சுவாமிகள் அவரது தலையில் அடித்தார். பொய்யாகக் கட்டியிருந்த சடாமுடி பிய்த்துக் கொண்டு விழுந்தது. தாடியில் பிடித்துக் கொண்டு சுவாமிகள் அவருடைய பிரம்பினாலேயே அடித்தார்கள். குட்டு வெளிப்பட்டதும் போலிச்சாமியார் பனங்காட்டுப் பக்கமாக ஓடிச்சென்று மறைந்து விட்டார்.

இத்தருணத்தில் ஆரப்பற்றையைச் சேர்ந்த காசுபதிச் சுவாமிகள் வந்து சுவாமியைப் பணிந்து வணங்கி நின்றார். சுவாமிகள் எப்போ வந்தார்? என்று காசுபதிச் சுவாமி வைத்தியரைக் கேட்டார். சுவாமிகள் ஒருவாரகாலமாக இங்குதான் இருக்கிறார். என்று கூறினார் வைத்தியர். காசுபதிச் சுவாமியார், “நான் இப்பொழுதுதான் கதிர்காமத்திலிருந்து நேராக வருகின்றேன். இரு தினங்களுக்கு முன் கதிர்காமத்தில் சுவாமிகளைச் சந்தித்து விபூதியும் வாங்கிப் பூசி அடியும் வாங்கினேன்” என்றார். எல்லாரும் ஆச்சரியமிக்கவராயினர்.

சுவாமிகள் ஒருமுறை கோளாவிலில் தெரு ஓரமாகப் படுத்துவிட்டார்கள். அவரைத் தூக்கிச் செல்வதற்காக 8 பேர் முயன்றார்கள். சுவாமிகளை அவர்களால் அசைக்கவே முடியவில்லை. சுவாமிகளிடம் உண்மையான பத்திகொண்ட குமார் என்பவர் அவ்வழியே வந்தார். அவர் தனியாகவே சுவாமிகளைத் தூக்கிக் கொண்டு கால் மைல் தூரத்திலுள்ள கந்தன் பரிகாரியாரின் வீட்டில் கொண்டு சென்று சேர்த்தார். இதனைக் கண்ணுற்றவர்கள், எப்படியப்பா சுவாமியைத் தூக்கிச் சென்றீர் என குமாரிடம் விசாரித்தனர். அதற்கு அவர், “ஒரு குழந்தையைத் தூக்குவது போன்ற பாரம்தானே சுவாமி இருந்தார் “என்று விடை அளித்தார்.

கந்தன் முருகப்பன் ஒரு கமக்காரர். வடபகுதியை இருப்பிடமாகக் கொண்டவர். அடியார்களுள் ஒருவர். கோளாவில் சுவாமிகளுடைய முருகப்பனின் தோட்டத்திலுள்ள சோளப்பயிர்கள் மழையில்லாமல் வாடி வதங்கி நின்றன. தனது குறையை முறையிடக் காரைதீவுக்குச் சுவாமிகளிடம் சென்றிருந்தார். முறையீட்டைக் கேட்ட சுவாமிகள் “கீழேயுந் தண்ணீர்தான், மேலேயுந் தண்ணீர்தானே” ஏன் கவலைப்படுவான் என்றார். அன்றுமாலையே மழை சோனாவாரியாகப் பெய்து பயிர்கள் எல்லாம் வாட்டம் தெளிந்து நின்றன.

முருகப்பனின் பிள்ளைகளான சின்னப்பப்பிள்ளை, திரையாள் என்பவர்களுக்கு நீண்டநாட்களாகக் காய்ச்சல். பல வைத்தியர்களிடம் மருந்து எடுத்தும் பலன் ஒன்றும் கிட்டவில்லை. கடைசியாகச் சுவாமிகளிடம் மனைவியும் பிள்ளைகளுமாகச் சென்றனர். அன்று மரவள்ளிக்கிழங்கு கறியும் சோறும்தான் சுவாமிகளுடைய ஆச்சிரமத்தில் சாப்பாடு. வெகுநாட்களாக அன்ன ஆகாரமின்றி இருந்த குழந்தைகள் மிக விருப்பத்தோடு மரவள்ளிக்கிழங்கும் சோறும் சாப்பிட்டனர். காய்ச்சல் இருந்த இடம் தெரியாமலே நீங்கிவிட்டது.

(சித்தனைக்குட்டிச் சுவாமி மீண்டும் வருவார்.)

திருச்சிற்றம்பலம்

ஆக்கம் : ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள்
தொகுப்பு : சிவத்திரு.வடிவேலு கங்காளன்

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று:
# எம்பிரான் திருஞானசம்பந்தன்





## அரவு தீண்டிய இளைஞனை உயிர்ப்பித்தமை:

பிள்ளையார் திருநள்ளாற்றினின்றும் நீங்கி திருச்சாத்தமங்கையை அடைந்து, அந்தத் திருப்பதியினின்று, வந்து தம்மை எதிர்கொண்டு வணங்கிய திருநீலநக்கநாயனாரோடு சென்று, அயவந்தியென்னும் ஆலயத்திற்சென்று இறைவனை வணங்கிக்கொண்டு, திருநீலநக்கநாயனாருடைய திருமாளிகைக்குப் போய்த் திருவமுது செய்து, அன்றிரவு அங்கே பள்ளி கொண்டார். மறுநாள் திருநீலநக்கநாயனருக்கு விடை கொடுத்துத் திருச்சாத்தமங்கையை நீக்கி, திருநாகைக்காரோணம், கீழ்வேளூர் என்னுந்தலங்களை வணங்கிக் கொண்டு, பிற தலங்களையும் வணங்கும்படி எழுந்தருளினார். அப்பொழுது திருச்செங்காட்டாங் குடியில் இருக்கின்ற சிறுத்தொண்டநாயனார் அதனைக் கேள்வியுற்று ஓடிச்சென்று பிள்ளையாரை எதிர்கொண்டு, தம்முடைய திருப்பதியில் அழைத்துக் கொண்டு போனார். பிள்ளையார் அப்பதியிலிருக்கின்ற கணபதீச்சரமென்னுந்திருக்கோயிலை வணங்கி, சிறுத்தொண்ட நாயனாரைச் சிறப்பித்துத் திருப்பதிகம் பாடி அந்நாயனாருடைய வீட்டிலே போய்த் திருவமுது செய்து கொண்டு அங்கெழுந்தருளியிருந்தார்.

சில நாளாயின பின், திருமருகலுக்குப் போய், திருமருகல் இறைவனை வணங்கிக் கொண்டு அங்கிருந்தார். அந்நாளிலே, விடியற்காலை வேளையில் ஒரு பெண்ணின் அழுகுரலைக் கேட்ட கருணை கொண்ட காழி வேந்தர், அப்பெண்ணை அணுகி என்ன நடந்தது? என்று விசாரித்தார். அப் பெண், “தான் வைப்பூர் தாமன் எனும் வணிகரின் ஏழாவது பெண் என்றும் அங்கு இறந்து கிடக்கும் இளைஞன் தன் மாமன் என்றும் கூறினார். மேலும், “தம் தந்தை தன் மாமனுக்குத் தனது மூத்த சகோதரிகளை மணம் செய்து கொடுப்பதாகச் சொல்லி ஆறு முறைகளும் அவரை ஏமாற்றிவிட்டார். அதனால் தான் மாமன் மீது பரிவுகொண்டு உடன் போக்காக வந்துவிட்டதாகவும், வந்தவிடத்தில் இரவில் தங்கியிருந்தபோது தன் மாமனை விடந்தீண்டிவிட்டதாகவும்” கூறி அழுதாள்.

உளம் நெகிழ்ந்த சம்பந்தர், திருமருகற் பெருமானை நோக்கி,

**“சடையா எனுமால் சரண் நீ எனுமால்**
**விடையா எனுமால் வெருவா விழுமால்**
**மடையார் குவளை மலரும் மருகல்**
**உடையாய் தகுமோ? இவளுண் மெலிவே.”** எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினார்.

அந்நிலையில் அவ்விளைஞன் விடந்தீர்ந்து உயிர் பெற்றெழுந்தான். இளைஞனும் அப்பெண்ணும் திருப்புகலியாரின் புனிதத் திருவடிகளில் பணிந்து வணங்கினர். அவ்விருவருக்கும் சம்பந்தர் திருமணம் செய்து வைத்தும் மகிழ்ந்தார்.

மீண்டும் சிறுத்தொண்டநாயனார் வந்து வேண்ட, பிள்ளையார் மீண்டும் திருச்செங்காட்டாங்குடிக்கு எழுந்தருள விரும்பி, அடியாரொடும் அத்திருமருகற் கோயிலிற் சென்று வணங்கியவேளையில், பரமசிவன் தான் திருச்செங்காட்டாங்குடியிலிருக்கின்ற திருக்கோலத்தை அவருக்கு அங்கே காட்டியருளினார். பிள்ளையார் அதுகண்டு மனமகிழ்ந்து, “அங்கமும் வேதமு மோதுநாவர்” என்னுந் திருப்பதிகம்பாடி, அந்தத் திருப்பதியிலே தானே எழுந்தருளியிருந்தார்.

## பஞ்சம் போக்கப் படிக்காசு பெற்றமை:

சம்பந்தர், அப்பர்பெருமானோடு இறைவனை வணங்கிக் கொண்டு திருவீழிமிழலையில் இருக்கும் நாளிலே, மழையின்மையாலுங் காவேரிப்பெருக்கு இன்மையாலும் பஞ்சம் உண்டானது. அதனால் உயிர்களெல்லாம் வருத்தமுற்றன. சிவனடியார்களையும் பசிநோய் வருத்திற்று. அதுகண்டு பாலறாவாயராகிய பிள்ளையாரும் அப்பர் பெருமானோடு “சிவபெருமானது திருநீற்றை பூசிய அடியார்களுக்குங் கவலை வருமோ?” எனத் திருவுளமிரங்கி, பரமசிவனுடைய திருவடிகளைச் சிந்தித்துக்கொண்டு, அன்றிரவு துயின்றார்கள். துயிலும்போது, பரமசிவன் அவ்விருவருக்கும் கனவிலே தோன்றி, “காலபேதத்தினாலே நீங்கள் மனவாட்டம் அடையீர்களாயினும், உங்களை வழிபடுகின்ற அடியார்களுடைய வருத்தத்தை நீங்கும்பொருட்டு, இப்பஞ்சம் நீங்கும் வரைக்கும் நான் தினந்தோறும் திருக்கோயிலின் கிழக்குப் பீடத்திலும் மேற்குப் பீடத்திலும் ஒவ்வொரு காசு உங்களுக்குத் தருகின்றோம்” என்று சொல்லி, மறைந்தருளினார்.

பிள்ளையார் விழித்தெழுந்து, திருவருளைத் துதித்து. அப்பர்பெருமானோடு திருக்கோயிலிற் புகுந்தபோது, கிழக்குப் பீடத்திலேயே காசு இருத்தலைக் கண்டு, விருப்பத்தோடுந் தொழுது, அதனை எடுத்து. “நாடோறுஞ் சிவனடியார்களெல்லாரும் வந்து அமுது செய்யக் கடவர்கள்” என்று இரண்டு காலங்களிலும் பறை சாற்றித் தெரிவித்து, தம்முடைய திருமடத்தில் வரும் அடியார்களுக்குக் கறி, நெய், பால், தயிரோடு அன்னம் இட்டுக்கொண்டு இருந்தார். அப்பர்பெருமானும் மேற்குப் பீடத்தில் வைக்கப்படுங் காசை எடுத்து, அப்படியே அடியார்களைத் திருவமுது செய்வித்தார்.

இப்படி நிகழுநாளிலே, பிள்ளையார், அப்பர்பெருமானுடைய திருமடத்திலே அடியார்கள் காலம்பெறத் திருவமுது செய்தலைக் கண்டு, தம்முடைய திருமடத்திற் பணியாட்களை நோக்கி, “நீங்கள் காலம்பெற அமுது தயார்செய்து இங்கே வரும் அடியார்களுக்குக் கொடாமைக்குக் காரணம் யாது? என்று வினாவியருளினார். பணியாட்கள் பாலறாவாயரை வணங்கி நின்று, “சுவாமி! தேவரீர் கடவுளிடத்திற் பெறும் படிக்காசைத் தினந்தோறும் பண்டம் வாங்குதற்குக் கொண்டுபோனால் அதற்கு வாசி கேட்கின்றார்கள். அப்பர்பெருமான் பெற்ற காசையோ வாசியின்றி ஏற்றுக்கொள்கின்றார்கள். இதினாலே காலந்தாழ்கின்றது” என்றார்கள். பிள்ளையார் அதைக்கேட்டு அப்பர்பெருமான் கைத்தொண்டு செய்தலால் அவர் பெறுங் காசு வட்டமின்றி ஏற்கப்படுகின்றது. என்று சிந்தித்து, “இனி வரும் நாட்களிலே தருங்காசு வாசி தீரும்பொருட்டுப் பாடுவேன்” எனத் திருவுளங்கொண்டார். அடுத்தநாள் திருக்கோயிலே புகுந்து சிவபிரானை வணங்கி,

**“வாசிதீரவே காசு நல்கிவீர்**
**மாசின் மிழலையீ ரேச லில்லையே,”**

என்னும் திருப்பதிகம் பாடி, நற்காசு பெற்றார். அந்த காசைப் பணியாட்கள் கொண்டுபோய்க் கடையிலே காட்ட, அங்குள்ளோர் “இக்காசு மிகநன்று வேண்டுவனவற்றை நாந்தருவோம்” என்று கொடுத்தார்கள். அன்று தொடங்கிய பணியாட்கள் அடியவர்களைக் காலம்பெறத் திருவமுது செய்வித்தார்கள். இருவருடைய திருமடங்களிலும் நாள்தோறும் எண்ணிறந்த சிவனடியார்கள் வந்து திருவமுது செய்து மகிழ்ந்திருக்குங்காலத்திலே, எங்கும் மழை பெய்து தானிய முதலியவைகள் மிக விளைந்தமையால், உயிர்களெல்லாந் துன்பம் நீங்கி இன்பமுற்றன.

திருச்சிற்றம்பலம்

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு முயங்குபூண்முலையம்மை உடனுறை திருமுருகநாதர் திருக்கோயில் - திருமுருகன்பூண்டி (மாதவிவனம்)

## (தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 206 ஆவது திருக்கோயில் - திருமுருகன்பூண்டி)



சிவபூசை செய்வது ஆன்மாக்களது தவிர்க்க ஒண்ணாக்கடமை என்பதை உணர்த்த சோமசுந்தர பாண்டியனாய் வந்த இறைவனே, மதுரையில் 'இம்மையே நன்மை தருவார்' என்ற மூர்த்தியை நிறுவித் தம்மைத் தாமே வழிபட்டார். அதுபோல அம்மை காஞ்சியிலும், மயிலாப்பூரிலும், மயிலாடுதுறையிலும் இறைவனைப் பூசித்துள்ளார். கணபதி, சிவ பூசனை புரிந்த தலம் திருச்செங்காட்டங்குடியிலுள்ள கணபதீச்சரம். அதுபோல் முருகன் பூசித்த தலங்களுள் திருச்செந்தூர், சேய்ஞ்ஞலூர் என்ற ஒழுங்கில் முயங்குபூண் முலையம்மை உடனுறை திருமுருகநாதர் உறையும் பதியே திருமுருகன்பூண்டித் திருத்தலமாகும்.

**அமைவிடம்:** திருப்பூர் மாவட்டம், தமிழ்நாடு

இத்தலம் தமிழ்நாட்டில் திருப்பூர் மாவட்டத்திலுள்ள திருமுருகன்பூண்டியில் அமைந்துள்ளது. அவினாசி-திருப்பூர் சாலையில் அவினாசியிலிருந்து சுமார் 6.5 கிமீ தொலைவில் அமைந்துள்ளது. இவ்விடத்துக்கு அருகில் அமைந்துள்ள தொடருந்து நிலையம் திருப்பூர் தொடருந்து நிலையம், வானூர்தி நிலையம் கோயம்புத்தூர் வானூர்தி நிலையம்.

**இறைவர் திருப்பெயர்:** திருமுருகநாதர் (சத்யோஜாதமூர்த்தி), முருகநாதேசுவரர், முருகநாதசுவாமி.

**இறைவியார் திருப்பெயர்:** முயங்குபூண் முலையம்மை (ஆலிங்கபூதநாதனாம்பிகை), ஆவுடைநாயகி, மங்களாம்பிகை.

**கோயில் மரம்:** மாதவி மரம் (குருக்கத்தி எனப்படும் முல்லைக் கொடியில் ஓர் இனம்)

**தீர்த்தம்:** சண்முக தீர்த்தம், ஞான தீர்த்தம், பிரம்மத் தீர்த்தம்

**வழிபட்டோர்:** முருகப் பெருமான், அகத்தியர், துருவாச முனிவர், மார்க்கண்டேயர், சுந்தரமூர்த்தி நாயனார்

**பாமாலை:** சுந்தரமூர்த்தி நாயனார், தண்டபாணி சுவாமிகள், அருணகிரிநாதர்

### திருமுருகன் பூண்டி திருத்தலம் மீது பாடப்பட்ட திருப்பதிகங்கள்

### சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய திருப்பதிகம்

வேதம் ஓதி வெண்நீறு பூசிவெண் கோவணம் தற்று அயலே
ஓதம் மேவிய ஒற்றியூரையும் உத்திரம் நீர் மகிழ்வீர்
மோதி வேடுவர் கூறை கொள்ளும் முருகன் பூண்டி மாநகர் வாய்
ஏது காரணம் எது காவல் கொண்டு எத்துக்கு இங்கு இருந்தீர் எம்பிரானீரே.

### அருணகிரிநாதர் அருளிய திருப்பதிகம்

அவசிய முன்வேண்டிப் பலகாலும்
அறிவில் உணர்ந்து ஆண்டுக்கொரு நாளில்
தவ செபமும் தீண்டிக் கனிவாகிச்
சரணமதும் பூண்டற்கு அருள்வாயே
சவதமொடும் தாண்டித் தகரூர்வாய்
சடுசமயம் காண்டற்கு அரியானே
சிவகுமரன் பீண்டிற் பெரியானே
திருமுருகன்பூண்டிப் பெருமாளே.

### திருத்தலச் சிறப்பு

இத்தல இறைவன், முருகனால் திருநிலைப்படுத்தப்பட்டு வணங்கப்பட்டதால், திருமுருகநாதர் என்ற திருப்பெயரில் அழைக்கப்படுகிறார். அவர் வணங்கியதை விளக்கும் முகமாக இத்தலத்தில் தெற்கு நோக்கியபடி உள்ள முருகன் சன்னதியின் கருவறைக்கு உள்பகுதியில் தென்புறம் மேற்கு நோக்கியபடி இலிங்கம் ஒன்று உள்ளது. முருகன் இங்கு வந்து சிவனை வழிபடும் முன்பு தனது திருவேலை கோயிலுக்கு வெளியே சற்று தள்ளி தரையில் ஊன்றினார். மயில் வாகனத்தை அதன் அருகில் நிறுத்தி வைத்தார். இதனால் கோயிலுக்குள் இருக்கும் முருகனின் கையில் வேல் இருக்காது. மயில் வாகனமும் தனித்து நிற்கிறார்.

சுந்தரர் தன் பொருள் காணாமல் போனது பற்றி முறையிட்டு பாடியபோதும், பின்னர் பொருளைத் திரும்பப்பெற்ற போதும் உள்ள முகபாவனைகளுடன் மூன்று சிலைகள் சிவனின் சன்னதியின் முன்புறம் உள்ளது. கோயில் வெளி வீதியில் உள்ள ஆடல்வல்லான் சபை, சிவன் பிரம்மதாண்டவம் ஆடிய சிறப்பு பெற்றது. கோயிலின் மையத்தில் சண்முகதீர்த்தம், இடப்புறம் ஞானதீர்த்தம், வலப்புறம் பிரம்ம தீர்த்தம் ஆகிய மூன்று தீர்த்தங்கள் மட்டுமே உள்ளது. இத்தலத்தின் தென்கிழக்கில் வடக்கு நோக்கியபடி எட்டு கைகளுடன் இறைவனின் துணைவியார், நீலகண்டி என்ற திருநாமத்துடன், காவல் தெய்வமாக அருளுறைகின்றாள்.

முற்காலத்தில் புத்திரப்பேறின்றி தவித்த மகாரதன் எனும் பாண்டிய மன்னன் ஒருவன் சண்முக தீர்த்தத்தில் நீராடி, அதன் நீரைக் கொண்டு பாயசம் செய்து பசும்பால், கற்கண்டு சேர்த்து சுவாமிக்கு படைத்து, அந்தணர்களுக்கு தானமும் செய்தான். அதன் பயனாக அவன் இரட்டைக் குழந்தைகளை பெற்ற சிறப்புடைய தலம்.

சுந்தருடன் திருவிளையாடல்: சிவனின் சிறந்த பத்தரான சுந்தரர் தான் பெற்ற கவிப்புலமையின் பலனாக தனது நண்பனான மன்னன் சேரமானிடம் பொன்னும், பொருளுமாக பரிசுகள் பல பெற்று இவ்வழியே திரும்பிக்கொண்டிருந்தார். தற்போது கோயில் அமைந்துள்ள பகுதிக்கு அருகே வந்தபோது இருட்டியதால் அருகில் உள்ள கூப்பிடுவிநாயகர் கோயில் வாயிலில் ஓய்வெடுத்தார். அப்போது, தன்னை துதிக்காமல் சென்ற சுந்தரரை சோதிக்க எண்ணிய எம்பெருமான், தனது பூதகணங்களை வேடுவர் வடிவில் அனுப்பி அவரிடம் இருந்த பரிசுப் பொருட்களைக் கவரச்செய்தார். இதனால் மனக்கலக்கமுற்ற சுந்தரர் அங்கே இருந்த கூப்பிடுவிநாயகரிடம் தனது பொருட்களை மீட்க வழி கூறும் படி முறையிட்டார். தனது தகப்பனின் திருவிளையாடலை அறிந்த அவர் தும்பிக்கையால் கிழக்கு திசை நோக்கி காட்டினார்.

அவர் காட்டிய திசைக்கு வந்த சுந்தரர் அங்கு பதிகொண்டுள்ள பரம்பொருளிடம் முறையிட்டு அவரை உரிமையுடன் திட்டிப்பாடி இழந்த பொருள் மீட்டுத் தரும்படி வேண்டினார். அவரது பாடலில் மயங்கிய சிவபெருமான் தான் பறித்த பொன்னையும், பொருளையும் அவருக்கே திருப்பி வழங்கி ஆசிபுரிந்தார். இவ்வாறு சுந்தரரின் பாடலைக் கேட்பதற்காகவே எம்பெருமான் தனியே திருவிளையாடல் நடத்திய தலம் எனும் பெருமையை உடையது.

### திருத்தல வரலாறு

ஆயிரத்தெட்டு அண்டங்களையும் அளவிலாத காலம் வரையில் அடக்கி ஆளும் வரம் பெற்ற சூரபத்மன், ஆணவம் கொண்டு தேவர்களை சிறைப்படுத்தி துன்புறுத்தி வந்தான். அவனது அட்டூழியம் நாளுக்கு நாள் பெருகவே அவனை அழித்து, தேவர் குலத்தை காத்திட முருகன் போருக்கு தயாரானார். ஆறுமுகங்கள் கொண்டு, அல்லல் தந்த சூரனுடன் போர் கொண்டு அவனை தனது வேற்படையால் இரண்டாக வெட்டி பின்னர் மயிலாகவும், சேவலாகவும் மாற்றி ஆட்கொண்டார். எப்படியிருப்பினும், சூரனை துன்புறுத்தியதன் விளைவாக ஆறுமுகனை கொலைப்பாவ தோசம் (பிரம்மஹத்தி) பீடித்தது. தோசம் நீங்க, கயிலை மலையில் இறைவன் சிவபெருமான் கூறியபடி மாதவிநாதரை வணங்க



வந்தார். அப்போது பூசைக்கு தீர்த்தம் தேவைப்பட அவர் தனது வேலினால் அவ்விடத்தில் ஊன்ற தீர்த்தம் தோன்றியது. அந்நீர் எடுத்து, மேற்கு நோக்கியபடி சிவன் கோயிலை அமைத்து வணங்கினார். தோசமும் நீங்கப்பெற்றார். அவ்வாறு நீங்கிய கொலைப்பாவ தோசமே (பிரம்மஹத்தி), தற்போது கோயிலின் வெளியே உள்ள வேம்படிமுருகன் சன்னதியின் அருகில் உள்ள சதுரக்கல்லாக இருப்பதாக புராண வரலாறு கூறுகிறது.

### திருக்கோயில் அமைப்பு

முருகநாதர் கோயில் மேற்குப் பார்த்துள்ளது. இங்கு வழிபட்ட அகத்தியரையும், மார்க்கண்டேயரையும், துருவாசரையும் உட்புறக் கற்சுவர்களில் காணலாம். அகத்தியர் வழிபட்ட கோயில்கள் எல்லாம் மேற்கு முக மூர்த்தியை உடையவை என்றும் மொழிவர் சிலர். கொடிமரம் தாண்டியதும் கோயிலின் உள் வாயிலில் நமக்கு வலப்புறம் மூன்று திருவுருவங்கள் காணப்படுகின்றன. ஒன்று வில்லும் அம்பும் பிடித்த வேட்டுவக்கோலம், மற்ற ஒன்றில் பரவச நிலையில் நிற்கும் ஒருவர். அவரே காண்பதற்குப் பரிதாப நிலையில் நிற்கிறார், மற்றொன்றில். வேலவன் தந்தை இம்மூன்று சிற்பங்களும், பழமை வாய்ந்தவையாய்த் தோன்றுகின்றன.

அடுத்து இருப்பது ஆறுமுகன் சந்நிதி. தெற்கு நோக்கிய சிறப்புடையது. ஆறுமுகமும், பன்னிரு கரங்களும் உடைய அம்மூர்த்தி அழகிய மயிலுடன் காட்சியளிக்கிறார். திருச்செந்தூரில் எப்படிச் சுப்பிரமணியரின் கருவறையில் அவர் பூசிக்கும் சிவலிங்கம் உள்ளதோ அப்படியே இங்கும் சிவலிங்கம் ஒன்று ஆறுமுகனின் கருவறை உள்ளே எதிர் மூலையில் இருக்கக் காணலாம். உள்வீதியில் இருக்கும் சண்முக தீர்த்தம் முருகன் பூசனைக்காக வேலாயுதத்தால் தோண்டப்பட்டது. தினமும் நான்கு கால பூசையும், மாசித் திங்களில் பதினொரு நாள் பெருந்திருவிழாவும்





நடைபெறுகின்றன. மாசி மகத்தில் தேர்விழா. முயங்குபூண் முலையம்மை கோயில் இறைவனின் இடப்பாகத்தில் வெளிச் சுற்றில் அமைந்துள்ளது. இவ்வம்மைக்கு ஆவுடைநாயகி என்ற பெயரும் உண்டு.

வீதியில் பைரவரின் சந்நிதி முன்னர், நாலரை அடி நீளமும் அகலமும் ஆழமுமான குழியைக் காணலாம். சுந்தரரிடமிருந்து பறித்த பொருளைப் பாதுகாக்க இது பயன்பட்டதாக நம்பப்படுகிறது. சற்றே தூரத்தில் சாலையின் மறுபுறம் உள்ள கோயிலை அடைந்தால் மாதவிவனேசுரரைக் காணலாம். கிழக்குப் பார்த்த சந்நிதி. பெரிய நந்தி சுவாமியை நோக்கிப் படுத்திருக்கிறார். மாலாதரன் என்ற வேட்டுவ அரசனால் பூசிக்கப்பட்ட இம்மாதவிவனேசுரர் சுயம்புமூர்த்தி. நுழை வாயிலில் ஒருமுக முருகன் ஒய்யாரமாய் நிற்கிறார். உள்ளே மாதவி தீர்த்தம். இடப்பாகத்தில் மங்களநாயகி எழுந்தருளியிருக்கிறார்.

திருமுருகன் பூண்டியில் மாமாங்கப் பிள்ளையார் கோயிலும், கரிவரதராசப் பெருமாள் கோயிலும் தனித்தனியே உள்ளன. முருகநாதர் கோயில் கல்வெட்டில் நந்தவனத்திற்கு நிலமும், விளக்கு எரிப்பதற்கு நிபந்தங்களும் அன்பர்கள் பலரால் அளிக்கப்பட்ட செய்தியைக் காண்கிறோம். 1983ம் ஆண்டுக் கல்வெட்டு அறிக்கையில் 571 முதல் 579 வரை எண் பெற்றனவாக அவை இடம்பெற்றுள்ளன. இவை குலோத்துங்க சோழன் காலத்தையும், வீர ராசேந்திரன் காலத்தையும் சேர்ந்தவை.

இவ்வூர்த் தலபுராணம் பாடியவர் ஓராட்டுக் குப்பை செட்டிபாளையம் வாசுதேவ முதலியார். அது பதினொரு சருக்கங்களும், அறுநூற்றுப் பதினெட்டு விருத்தங்களும் கொண்டது. "அவசியம் முன்வேண்டிப் பலகாலும்" என்று தொடங்கி "சிவகுமர அன்பீண்டிற் பெயரானே, திருமுருகன் பூண்டிப் பெருமாளே" (952) என்று வரும் அருணகிரிநாதர் திருப்புகழும் இவ்வூருக்கு உண்டு. தவத்திரு தண்டபாணி சுவாமிகள் வண்ணம் பாடுவதில் வல்லவர். "வண்ணச் சரபம்" என்றும் அழைக்கப் பெற்றவர். இவர் சிவனுக்கு இரு பதிகங்களும், இவ்வூர்ப் பெருமாளுக்கு ஒரு பதிகமும் பாடியுள்ளார்.

திருச்சிற்றம்பலம்

சிவத்திரு. தென்னாடு நிலவன்
தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
+94 21 221 2739 | nilavan@thennadu.org

# யாழ்ப்பாணம் வேதாந்த மடத்தின் வளர்ச்சிக்காக உழைத்த ஏழாவது குருமுதல்வர்

# ஸ்ரீமத் செல்லத்துரை சோமஸ்கந்தவேள் சுவாமிகளின் குருபூசை ஆடிப்பூச நாண்மீன்

**அறந்தானியற்றும் அவனிலும் கோடி அதிகமில்லந்**
**துறந்தானவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன்**
**மறந்தானறக் கற்றறிவோடிருந்திரு வாதனையற்றிருந்தான்**
**பெருமையை யென் சொல்லுவேன் கச்சியேகம்பனே**

\- பட்டினத்தார்

இல்லறத்தை நடாத்துகிறவனைப் பார்க்கிலும், இல்லறத்தை விட்டு நீங்கி (புறப்பற்றை ஒழித்து) துறவற ஒழுக்கம் மேற்கொண்டவன் நூறு பங்கு மேம்பட்டவன். அவனைப் பார்க்கிலும் அகத்துறவு கொண்டவன் நூறு கோடி பங்கு மேற்பட்டவன் ஆவான். அதருமந்தனை விட்டொழிய, நன்னூற்களைப் படித்து, சித் பொருளாகிய தேவரீருடன் விளங்கி, இருவகைத் துன்பங்களற்று யான் என்னும் முனைப்பை அழித்தவனது மகத்துவத்தை என்னவென்று கூறுவது.

இவ்விதம் துறவு நெறியை மேற்கொண்டு, தங்கள் ஆன்ம ஈடேற்றத்துக்காக உழைத்ததுடன், இறைவனை அடைய வேண்டும் என்ற பேரவா கொண்டார்க்கு, வழிகாட்டிகளாயும் அமைந்து சேவை செய்த மகான்களால் உருவாக்கப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு வந்தது தான், யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் அமைந்துள்ள வேதாந்த மடம். இந்த மடம் ஆரம்பத்தில் வேதாந்த வழியில் இயங்கி வந்தாலும் தற்பொழுது சித்தாந்தம் மற்றும் திருமுறை வழிகளும் பின்பற்றப்பட்டு வருகின்றன. இது சுவாமி சோமாஸ்கந்வேள் அவர்களின் காலத்தில் இருந்து பின்பற்றப்பட்டு வருகிறது. தற்போதுள்ள எட்டாம் குருமுதல்வர் மேலும் சித்தாந்த மற்றும் திருமுறை வழிபாடுகளுக்கு மெருகூட்டி வருகிறார். யாழ்ப்பாணத்து மடங்களில் இன்றும் திருவருளால் குருத்தொடர்ச்சி இங்கு சிறப்பாக காணப்படுகிறது.


இம்மடத்தின் ஆறாவது குருபீடாதிபதியாக இருந்து வந்த நமசிவாயம் சுவாமிகள் பூரணமடைந்ததன் பின்னர், இம்மடத்தினை நிர்வகிக்கும் பொறுப்பு 1983ல்




சோமஸ்கந்தவேள் சுவாமிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. அன்றிலிருந்து 25.07.2006 அன்று வரை தூய்மையான துறவற நெறியில் நின்று பல வித துன்பங்களுக்கு மத்தியிலும் என்றும் நீங்காத மகிழ்வுடன் மடத்தின் கடமைகளைச் செவ்வனே நடாத்தி வந்தார்.

சீர்வளர்சீர் (ஸ்ரீமத்) சோமஸ்கந்தவேள் சுவாமிகள் புத்தூர் மழவராயர் பரம்பரையைச் சேர்ந்த செல்லத்துரை என்பவருக்கும், திருநெல்வேலி தலையாழி திருமடந்தை நாயக முதலியார் வம்சத்தில் உதித்த சிவபாக்கியம் என்பவருக்கும், 1944ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 27ம் நாள் இரண்டாவது புத்திரனாகப் பிறந்தார். இவருக்கு முருகவேள் என்று ஒரு தமயனாரும், குமரவேள் என்ற தம்பியாரும் இரண்டு தங்கையர்களும் இருந்தனர். ஆரம்ப காலத்தில் கொக்குவில் கிழக்கு (1967 தொடக்கம்) பழைய புகையிரத நிலைய வீதியில் கந்தையா அப்பு அவர்களின் வீட்டில் வசித்து வந்தனர். பின்னர் பொற்பதி வீதியில் இருந்து விவசாயப் பண்ணைக்கு செல்லவும் வழியில் உள்ள வீடொன்றில் வசித்து வந்தார். அதன் பின்னர் கொக்குவில் கிழக்கு சாம்பியன் ஒழுங்கையில் வசித்துவந்தார்.

கொக்குவிலில் வசிக்கும் காலத்தில் பொற்பதிப் பிள்ளையார் ஆலயத்துடன் நெருக்கமாக இருந்து பல சேவைகளை செய்து வந்துள்ளார். பொற்பதிப் பிள்ளையார் கோயில் குருக்கள் தியாகராஜா அவர்களுக்கு பல வழிகளிலும் உதவியாக இருந்து தன்னாலான பணிகளைச் செய்து வந்துள்ளார். 1983ம் ஆண்டு பொற்பதிப் பிள்ளையார்



**யாழ்ப்பாணம் சிவகுருநாத பீடம் ஏழாவது குருமுதல்வர் ஸ்ரீமத் செல்லத்துரை சோமஸ்கந்தவேள் சுவாமிகள்**

திருக்கோயிலுக்கு வசந்த மண்டபம் ஒன்றினை கட்டுவதற்கு ஊர் மக்களிடம் பணம் திரட்டி அதனை முழுமையாக செய்து முடித்தார்.

தந்தையார் வைத்தியத் தொழிலைச் செய்யும் முகமாக சாவகச்சேரியில் வசித்து வந்ததால், இளமைக் காலத்தில் சாவகச்சேரியில் கல்வி பயின்றார். பின்னர் கொக்குவில் இந்துக் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்தார். இளவயதிலேயே மட்டுவில் பொன்னுச்சாமிக் குருக்கள் அவர்களிடம் சிவ தீட்சையும் பெற்றுக் கொண்டார்.

இவரது தந்தையார் மகாதேவ சுவாமிகளது காலத்திலேயே வேதாந்த மடத்திற்கு அடிக்கடி வருகை தந்து, அங்கு நடைபெறும் வகுப்புக்கள் நிகழ்ச்சிகளில் பங்குபற்றி மகாதேவ சுவாமிகளின் ஆசி பெற்று வந்தவர்களில் ஒருவராவார். மகாதேவ சுவாமிகள் சமாதியடைந்ததின் பின்னர் இராமலிங்க சுவாமிகளிடமும் மிகவும் பயபத்தியுடையவராக இருந்தார். இராமலிங்க சுவாமிகளிடம் வரும்போது பாலகனாகிய சோமஸ்கந்தவேளும் உடன் வரத்தொடங்கினார். பாலன் பருவம் கடந்த இளைஞனாக வந்ததும் தானாகவே வேதாந்த மடத்திற்கு வந்து சுவாமிகளிடம் ஆசீர்வாதம் பெற்றுச்செல்லும் பழக்கமுடையவரானார். அக்காலத்திலேயே இராமலிங்க சுவாமிகள் இவருக்கு உருத்திராட்சம் அணிவித்து ஆன்மிக வழிக்குள்ளாக்கப்பட்ட பெரும்பேறு பெற்றார்.

இராமலிங்க சுவாமிகள் 1968இல் சமாதிப் பேறடைந்தார். அவர் சமாதியடைந்த பின்னர் மடத்தின் நீண்ட காலத் தொண்டராகிய நமசிவாயம் சுவாமிகளிடம் மடத்தின் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அதன்படி இயங்கும் காலத்தில் நாட்டுப் பிரச்சினைகளும் தொடங்கியது. நமசிவாயம் சுவாமிகளும் நோயுற்றார். அவர் தன் தளர்ந்த நிலையைக் கருத்திற்கொண்டு தனது பொறுப்புக்களை சோமஸ்கந்தவேள் சுவாமிகளுக்கு ஓர் மரண சாசனம் 1977இல் எழுதி ஒப்புவித்தார்.

அன்று முதல் சோமஸ்கந்தவேள் சுவாமிகள் தன் வீடுவாசல் உறவுகள் எல்லாவற்றையும் துறந்து, பூரண துறவியாக வேதாந்த மடத்தின் பராமரிப்பே தன் ஒரே நோக்காகக் கொண்டு, தன் இறுதி மூச்சிருக்கும் வரை பணி செய்தார். மனத்தைக் கடந்து வாழ்ந்த ஞானிகளின் சமாதிகளுக்கு தினமும் பூசை செய்யும் பெரும் பாக்கியத்தைப் பெற்றவர். ஆதலால் மிகுந்த மனோவலிமையுடனும் தினமும் மகிழ்ச்சியாகவும் இருந்தார்.

நாட்டு நிலைமைகளால் மடத்திற்கு எந்தவித வருமானமும் இல்லாத நிலையில் அதன் பூசைகள் மற்றும் குருபூசைகளை நடத்துவதற்காக மடத்தில் பசுக்களை வளர்த்து அதனால் பெறும் ஊதியத்தைக் கொண்டே செலவுகள் செய்து எதுவித குறையுமின்றி நிறைவாகவே எல்லாம் நடத்தி வந்தார்.

1995ஆம் ஆண்டு இடப்பெயர்வின்போது அல்லலுற்று சாவகச்சேரி விளைவேலியில் உள்ள கிளை மடத்தில் தஞ்சம் அடைந்த அகதிகள் மன அமைதியடைய வேண்டி ஆத்மஜோதி முத்தையா அவர்கள் தலைமையில் பிரார்த்தனைகளும் ஆன்மிக சொற்பொழிவுகளும் இடம்பெற்றன. மேலும் திருமந்திரம், திருமுறை, பெரியபுராணம் ஆகிய நூல்களின் முற்றோதல் நிகழ்வுகளும் இக்காலத்தில் இடம்பெற்றன. முன்னர் குறிப்பிட்டது போல் சோமாஸ்கந்வேள் சுவாமிகளின் காலத்தில் திருமுறை முற்றோதல்கள், திருமுறை வழிபாடுகள் சிறப்படைந்தன.

இக்காலத்தில் பண்ணிசை, சமயச் சொற்பொழிவுகள், பகவத்கீதை ஆகிய வகுப்புக்கள் இடம்பெற்றன. ஆனால் வேகமாக முன்னேறிவரும் செயற்கைச் சாதனங்களில் மனித மனம் ஈர்க்கப்பட்டு அதில் திழைத்திருக்கும் மனிதர்களுக்கு இவ்வகுப்புக்களில் பங்கு பற்றும் ஆர்வம் குறைந்து கொண்டே வந்துள்ளது. இன்றைய நாளில் இது சாதாரண நிகழ்ச்சியாகி விட்டது. இராமலிங்க வள்ளலாரே அவரது நாட்களில் ஒருமுறை "கடைவிரித்தேன் கொள்வாரில்லை" என்று ஆன்மிக தாகம் அற்றுப்போனதைக் கூறிப் போகின்றார்.

இவ்வாறு மடத்தின் அரும்பணிக்காக பாடுபட்ட சோமாஸ்கந்தவேள் சுவாமிகள், 2006ஆம் ஆண்டு ஆடி மறைமதி நன்னாளில், வில்லூன்றிப் பிள்ளையார் கோயிலுக்குச் சென்று, தீர்த்தக்கரையில் நீராடித் தனது கடமைகளை முடித்துக் கொண்டு வந்தவர், அன்று இரவு 2006ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆம் திகதி ஆடித் திங்கள் பூச நாண்மீனில் சமாதியடைந்தார்.

அவரது இறுதிக்கிரியைகள் அன்று மாலை அவரால் மடத்தின் எட்டாவது குருமுதல்வராக பொறுப்பேற்க தயார் செய்யப்பட்ட வேத வித்தியாசாகர சுவாமிகளால் செவ்வனே நிறைவேற்றப்பட்டு, அவரது உடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு அடியார்கள் புடைசூழ ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு தகனம் செய்யப்பட்டது. தொடர்ந்து மடத்தின் பொறுப்புக்கள் அனைத்தையும் தற்போது வேத வித்தியாசாகர சுவாமிகளே நடாத்தி வருகின்றார்.





தவத்திரு. சோமாஸ்கந்வேள் சுவாமிகளின் குருபூசை ஆடித் திங்கள் பூச நாண்மீனில் வருடந்தோறும் நடைபெறும். இம்முறை ஆடி மறைமதி நாளான, ஆடி 12ம் நாள் (28-07-2022) வியாழன் அன்று சிவகுருநாத குருபீடத்தில் நடைபெறும். சுவாமிகளின் குருவருள் என்றும் யாழ்ப்பாணத்தில் சைவத்தினையும் தமிழையும் காக்க வேண்டுமென்று குருவருளையும் திருவருளையும் வேண்டி யாழ்ப்பாணம் கொக்குவில் தென்னாடு ஐம்பூதநாதப் பெருமானிடம் விண்ணப்பம் வைக்கின்றோம்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**

**திருச்சிற்றம்பலம்**


# தென்னாட்டு நிகழ்வுகள்


ஆடித்திங்கள் நிறைமதி வழிபாடுகள் (13-07-2022)


அருளம்பலம் சுவாமிகள் குருபூசை (6-07-2022)


ஆனித்திங்கள் வளர்பிறை கழுவாய் வழிபாடு (11-07-2022)


ஆனித்திருமஞ்சனம் (6-07-2022)


மாணிக்கவாசகர் சுவாமிகள் குருபூசை (3-07-2022)


ஆனித்திங்கள் தேய்பிறை கழுவாய் வழிபாடும் தென்னாடு வெளியீடும் (26-06-2022)

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் இருபத்து இரண்டாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு கடகம் நல்லோரை ஆடித் திங்கள் 10ம் நாள், பதின்மும்மைப் பிறைநாள் அன்று (26-07-2022 செவ்வாய்க்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி , தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 221 2739 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org